தாழில்
ஆசிரியர்: K.பெருமாள் உடையார்
புதிய
25
காசு

# ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

## Doctors Agree is Good for You and Me

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

***Get a tin today***

ALVITONE LABORATORIES, MADRAS-16

★

சுவை மிக்கது ! வலிமை தரக்கூடியது !

சோர்வு நீக்கி சுகம் தருகிறது !

# ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு பானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை, சென்னை - 16

PHONE : 4305 GRAMS : "GOODHEART"

# MURLIMAL SANTRAM & CO.,

## (MADRAS) PRIVATE LTD.,

GOVERNMENT CONTROLLED STOCKISTS OF
STEEL & PIPES

### 13, Sembudoss Street, MADRAS-1.

★

Pipes available from Ready Stock,

GALVANISED, BLACK AND STEAM QUALITY

PIPES ½" TO 6" FROM

TATA / S & L AND BEST IMPORTED, AND ALSO

PIPE FITTINGS IN ALL SIZES,

CONTACT FOR REQUIREMENTS.

# K. P. பரசுராம் பிள்ளை & சன்ஸ்

ஹார்டுவேர் வியாபாரம்,

இரும்பு எஃகு சாமான் பேப்ரிகேட்டர்கள் :

## கோவை ஜில்லா "ஈஸ்ட்ராலா" பாட்டரி விற்பனை ஏஜண்டுகள்.

## " தி மெட்ராஸ் பேன்சி ஸ்டோர்ஸ் "

எல்லா பேன்சி சாமான்களும்
மொத்தமாகவும், சில்லரையாகவும்
சரசமாய் கிடைக்கும்.

# தொழில்

## இந்த இதழில்


**தலையங்கம் :** 15—1—59

| | | |
|---|---|---|
| பொங்கல் பெருநாள்! | ... | 5 |
| பாராட்டுகிறோம் | ... | 8 |
| கைத்தொழில்முறைகள் | ... | 13 |
| குறள் தரும் இன்பம் | ... | 13 |
| **தொடர் நாவல் :** | | |
| இதுதான் காதல் | ... | 17 |
| **சிறு கதைகள் :** | | |
| இரண டாக்டர் கதை | ... | 10 |
| லக்ஷதீவில் விக்ரமன் | ... | 33 |
| மனிதருள் மாணிக்கம் | ... | 43 |
| கடமை | ... | 49 |
| டாக்டர் குருசாமி முதலியார் | ... | 55 |
| சினிமா விமர்சனம் | ... | 60 |


---

கதை கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே

அகில இந்திய

# கதர் சுதேசி பொருட்காட்சியில்

## கலை நிகழ்ச்சிகள்.

ஜன. 16. வெள். 6-30 கே. ஏ. தங்கவேலு கோஷ்டியார்
நடிக்கும் "மனைவியின் மாங்கல்யம்" நாடகம்

ஜன. 17. சனி. 6-30 மணி. குமாரி ரேணுகாதேவி நடனம்

ஜன. 18. ஞாயி. 6-30 மணி. "மனோன்மணீயம் சுந்தரனார் நாடக
மன்றம்" "விதி வழியே" நாடகம்

ஜன. 19 திங்க. 6-30 மணி. சமத்துவ நாடக மன்றம்
தாழ்விலே உயர்வு நாடகம்

ஜன. 20. செவ். 6-30 மணி. காங்கிரஸ் ஊழியர் சங்கம்
"தியாகி குமரன்" நாடகம்

ஜன. 21. புதன். 6-30 மணி. லக்ஷிமி ராஜ்யம் நடனம்

ஜன. 22. வியா. 6-30 மணி. மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ்
"நிராசை"நாடகம்

ஜன. 23. வெள். 6-30 மணி வழக்கறிஞர் குழுவினர் நடிக்கும்
"அடநாராயணு" நாடகம்

ஜன. 24. சனி. 6-30 மணி. சேவா ஸ்டேஜ் சர்வீஸ்
"தேரோட்டி மகன்" நாடகம்

ஜன. 25. ஞாயி. 6-30 மணி ,, "புகழ் வழி" நாடகம்

ஜன. 26. திங். 6-30 மணி"பூம் புகார்" நாடகம்

ஜன. 27. செவ். 6 மணி குமாரி நளினி கோஷ்டியார் நடனம்

ஜன. 27. செவ். 7-15 மணி குமாரி ராஜ ராஜேஸ்வரி
கோஷ்டியார் நடனம்

ஜன. 28. புதன். 6-30 மணி. மாரிமுத்து கலா கோஷ்டி
"சுதந்திர தீபம்"

ஜன. 29. வியா. 6-30 மணி. கஸ்தூரி ஆர்ட்ஸ் க்ளப்
"டாக்டர் வசந்தா" நாடகம்

ஜன. 30. வெள். 6-30 மணி, ஸ்ரீ கோத்தமங்கலம் சுப்பு கோஷ்டி
யார் "காந்தி மகான் சரித்திரம்" கால க்ஷேபம்

ஜன. 31. சனி. 6-30 மணி. மாடர்ன் பைன் ஆர்ட்ஸ்
"தேடிய செல்வம்" நாடகம்

**K. S. G. ஹாஜா ஷெரீப் M. L. A. (தலைவர்)**

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

# தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்


| தொழில் 1 | சென்னை, 15—1—59 | இதழ் 18 |
|---|---|---|


## பொங்கல் பெருநாள்!

### இது தமிழ் நாட்டின் தனிப்பெருந் திருநாள்!

விவசாயத்தை நம்பி வாழ்வோரும், விவசாயத்தின் விளைவால் உயிர் வாழ்வோரும், விளைவுக்கு அதிபதியாய் விளங்கும் சூரியனை வழிப்படும் விழாவே பொங்கல். நவ நாகரிகத்தின் சின்னமாய் விளங்கும் அமெரிக்காவிலும் அறுவடைத் திருநாளைக் கொண்டாடுகின்றனர். அதன் பெயர் 'பொங்கல்' பண்டிகையென்றிராமல் 'அறுவடைத் திருநாள்' என்றழைக்கப்பட்டாலும் கொண்டாட்டத்தின் பொருள் ஒன்றேதான். சூரியனை தெய்வமாய்க் கொண்டாடும் ஆத்திக மனம் படைத்தோராயினும், பூமியைப் போன்று சூரியன் சாதாரண கோளமே யென்று அறுதியிடும் விஞ்ஞான உள்ளம் படைத்தோராயினும், சூன்யத்தில் தோன்றும் ஏதோ ஒன்று என்று முக்கியத்துவம் தராமல் மழுப்பும் சூன்ய வாதியாயினும் விளைவுக்காதாரமான ஆதித்தனை வழிபட-அல்லது

208364

போற்றவே செய்கின்றனர். லோகாயத வாதிகளான மேல்நாட்டினரே அறுவடைத் திருநாளைக் கொண்டாடுவ தின் மூலம் ஆதித்தனின் அதீத இயக்கத்தை மனமார போற்றுகின்றனர் — பூஜிக்கின்றனர் என்பது தெளி வாகிறதன்றோ!

நாத்தடிப்பாக நாத்திகம் பேசுவோரும் இயற்கை யின் மோதல் ஏற்படும்போது தான் அதீத சக்தியின் ஆற்றலையறிய முடிகிறது. இவர்களுக்கு விஞ்ஞான சாதனைகள் உதவியாய்த் தோன்றலாம்.

ரஷ்யரின் ராக்கெட் சந்திரனை எட்டுவதைக்குறித்து விஞ்ஞான சாதனையை வியக்கலாம். அணுகுண்டு ஜல வாயு குண்டுக்களின் அபாரசக்திகளைப் பாராட்டலாம்.

இவற்றிற்கெல்லாம் ஆதாரமான இயற்கை சாத னங்களை விஞ்ஞானி தானாக சிருஷ்டித்து விடுவதில்லை.

விதையை நட்டுத்தான் மரத்தை வளர்க்க முடிகி றது. விதையின்றி மரமில்லை. அதே போல் இயற்கை சாதனங்களின்றி விஞ்ஞான விளைவுகள் இல்லை.

இயற்கை: மரம், செடி, கொடி, புல், பூண்டு யாவற் றையும் வளர்க்கிறது. தனது மற்றைய முக்கிய சிருஷ்டிக ளான ஜீவவர்க்கங்களின் வளர்ச்சிக்கு அவை பயன் படுமாறு உதவுகிறது.

மானிட சமுதாய வளர்ச்சிக்கு அத்தியாவசியத் தேவையான தானியவகைகளைத் தந்துதவும் இயற் கையை வழிபடும் மனிதரினத்தின் மாண்பு மகத் தானதேயாகும்.

சென்றகால நிகழ்ச்சிகளை மறந்து, புதுநெல் அறு வடையாகி புதுப் பொங்கலை காண்பதின் மூலம் புது விதத் தெம்பை நாம் அடைகிறோம். இன்று வயிறார உண்டு இதயங்களிப்பதைப்போல் ஆண்டு முழுதும் குறைவற்ற உணவை உண்டு உடம்பையும் உயிரையும்

வளர்க்கவேண்டு மென்பதே இவ்வழிப்பாட்டின் குறிக்கோள் என்பது மிகையே அல்ல.

மனித வாழ்விற்கு அத்தியாவசியத் தேவையான உணவை முன்னிட்டு கொண்டாடும் விழாவான பொங்கலை, தொன்று தொட்டு நாம் கொண்டாடி வருவது போலவே பிற்கால சந்ததியாரும் கொண்டாடத் தவர மாட்டார்கள். அது தமிழ் மரபின் தனிச்சிறந்த பழக்கமாகி விட்டிருக்கிறது.

தெய்வம், தெய்வீகம், வழிபாடு, ஐதீகம், இவற்றையெல்லாம் பழிப்பவர்கள் கூட ஏதோ ஓர் தனிக்காரணத்தை சிருஷ்டித்துக்காட்டி பொங்கல் பெருநாளைக் கொண்டாடுகின்றனர் என்றால், அதன் மகத்தான சிறப்பை நாம் மதிப்பிடவும் கூடுமோ!

பழையன கழிதலும், புதியனப் புகுதலும் வழுவல கால வகையினானே" யென்றபடி சென்ற பொங்கலுக்குப் பின் நடந்த உணவு நெருக்கடியை மறந்து புதிதாய்ப் பொங்கியுள்ள பொங்கலில் நல்வாழ்வை எதிர்பார்ப்போம். நம்பிக் கெட்டோரில்லையென்பதுபழமொழியல்லவா? இப்புத்தாண்டு பொங்கல், நாட்டின் வறுமையைப் போக்குவதாய்—உணவுப் பொருள்களை தேவைக்கு உகந்த அளவில் விளைவின் மூலம் பெறச்செய்வதாய்—மக்கள் மனத்தில் குடிபுகுந்துள்ள மாசுக்களை நீக்கி நல்லதை நினைத்து நல்லதைச் செய்து நலமுறத் தூண்டுவதாய்—'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை.ஜாதியில், இழிவு கொண்டமனிதரென்பதிந்தியாவில் இல்லையே' யென்ற சமத்துவ மனப்பான்மை கொள்ளச் செய்வதாய்—தாய்நாடே தாயினும் சிறந்ததென்று எண்ணி அதன் வளர்ச்சிக்குப் பாடுபடத் தூண்டும் மனநிலை பெறக்கூடியதாய் அமைய வேண்டுமென்பது எமது அவா—பிரார்த்தனை.

நாடெங்கும் வாழ கேடொன்றுமில்லை. நாடு நலிந்தால் நாமும் நலிவோம். பிரிவினை மனப்பான்மை

பேதமையானது. ஒற்றுமையே நமது வளர்ச்சிக்கு வித்துபோன்றது. சலியாத உழைப்பின் மூலம் சகல நன்மைகளையும் அடைவோம். இப்புனிதப் பெருநாளில் வாசகர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும், ஏஜண்டு அன்பர்களுக்கும் பொங்கல் விழா முகப்போடு தோன்றும் "தொழில்" தனதுவாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக !
வாழ்க மக்கள்! வளர்க பாரதம்!

## பாராட்டுகிறோம்

இலங்கை அரசாங்கம் இந்திய லுங்கி இறக்கு மதிக்குத் தடை விதித்திருந்ததை ரத்து செய்துவிட்டதறிந்து ஒவ்வொரு தமிழனும் மகிழ்ச்சியடையவேண்டும். கைத்தறித்தொழிலை நம்பிவாழும் பல்லாயிரக் கணக்கான நெசவாளர்களுக்கு திடீரென்று ஏற்பட்ட பெரியதோர் முட்டுக்கட்டை நீங்கி விட்டது. இது சம்பந்தமாய் இலங்கை அரசாங்கம் விவேகமாய் நடந்துகொண்டது குறித்து நாம் மகிழ்ச்சியடைவதோடு பாராட்டவும் கடமைப்பட்டுள்ளோம். இதேபோன்று தமிழர்க்கு இழைத்து வரும் பல்வேறு தீங்குகளையும் அகற்றுவதின் மூலம் அண்டை நாடான இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பெறுவதோடு, தமிழ் மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் நீடித்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டியது அவசியம். நீண்டகாலமாக இலங்கை இந்தியாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே இருந்து வந்திருக்கிறது. சமீபகாலமாக இலங்கைவாழ் இந்தியர்க்கு—குறிப்பாக தமிழர்க்கு அடுத்தடுத்து புதுப்புதுத் தீங்குகளை சிருஷ்டித்து ஆர்ப்பாட்டம் செய்து வருவதில் ஆர்வங்காட்டுகின்றனர் அரசியல் வாதிகள். புதிதுபுதிதாய் வரும் மந்திரிகள் தத்தம் சக்திக்கும், அறிவுக்கும் ஏற்றவாறு ஏதோ ஓர் துறையில் இந்தியரை இன்னலில் சிக்கவிடுவதை ஓர் 'ஸ்டண்ட்' ஆகக் கருதுவதின் காரணம் என்ன

வாய்ப்பு இருக்குமென்பதை கவனித்தால் பொருமை என்ற முடிவுக்கு வர ஏது வேற்படுகிறது. திறமைசாலிகளான இந்தியர் உழைக்கப் பின்வாங்குவதில்லை. கடமையை நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாய் இருக்கக்கூடியவர்கள். பொருள் தேடுவதில் மற்றோரை மிஞ்சக்கூடியவர்கள், இவ்வித சாகஸத்தால் வெகுண்ட சிங்கள அரசியல் வாதிகள் இவ்வாறான ஸ்டண்ட்களைச் செய்து தமிழரை தாய் நாடு நோக்கி ஓட வழிவகுக்கின்றனர். தொன்று தொட்டு வணிகத்துறையிலும் அரசியல், சமூகத் துறைகளிலும் தொடர்பு கொண்டுள்ளவர்களானதால் திடீர் தாக்குதலால் வெகுண்டோட முடியாமல் திணறுகின்றனர் அங்கு வாழும் தமிழர்கள். தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களையும், கலாச்சார தொடர்புகளையும் நீடித்துக்கொள்ள ஜீவமரண போராட்டத்திலும் புறமுதுகிடாது தலை நிமிர்ந்து நிற்கின்றனர். இவ்வாறான இடையூறுகளில் சிக்கி அல்லலுறும் இந்தியர்க்கு குறிப்பாகத் தமிழர்க்கு உடனடியான பரிகாரங்களைத் தேடித் தந்து அவர்களின் நல்லுறவை நீடித்துக் கொள்ள மந்திரிகள் முன்வருவார்களென்று நம்புகிறோம்.

லுங்கி இறக்குமதித்தடையில் வெகுண்டுபோன கைத்தறி தொழிலாளர்க்கு உடனடிப்பரிகாரந் தேடித் தந்த இந்திய அரசாங்கத்தையும், இந்திய அரசாங்கம் அதி சீக்கிரத்தில் நடவடிக்கையில் இறங்குமாறு தூண்டிய சென்னை ராஜ்ய முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களையும் "தொழில்" பாராட்டுகிறது.

---

## கைத்தறி தொழில் வர்த்தக மகாநாடு

### ஏற்றுமதியை அனுமதிக்க மந்திரி ஸ்ரீR. வெங்கட்ராமன் வேண்டுகோள்

சென்னை ராஜ்ய கைத்தறி தொழில் வர்த்தக சங்க மகாநாடு 11—1—59 சென்னையில் நடந்தபோது ஜனாப் M.S.A. மஜீத் தலைமை வகித்தார். தலைவர் நெசவாளர் கஷ்டங்களை எடுத்து விளக்கிப் பேசிய பின்னர், மகா நாட்டை திறந்து வைக்குமாறு ஜனாப் M. S. அப்துல் ரஹீம் மந்திரியை கேட்டுக் கொண்டார்.

#### ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் உரை

சென்னை கைத் தொழில், தொழிலாளர் மந்திரி ஸ்ரீ

ஆர். வெங்கட்ராமன் மகா நாட்டை, ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பருத்தி நூல், ரேயான், ரசாயனப் பொருள்கள், சாயங்கள் போன்ற மூலப் பொருள்களின் இறக்குமதிக்கு வசதி யளிக்கப்படும் என்று அ. இ. கைத்தறி போர்டு சேர்மன் குறிப்பிட்டதை தெரிவித்தார்.

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி கடந்த சில வருடங்களில் குறைந்து விட்டது. 1953-ல் இந்தியா, ரூ. 10 கோடி பெறுமான கைத்தறி ஜவுளிகளை ஏற்றுமதி செய்திருக்கிறது. 1954-ல் அது 8, 38 கோடியாகக் குறைந்து விட்டது.

### ஏற்றுமதி குறைவு

ஸ்ரீ வெங்கட்ராமன் மேலும் கூறினர்: 1956-ல் கைத்தறி துணியில் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 8.49 கோடியாகக் குறைந்துவிட்டது. 1956ல் ஏற்றுமதி மதிப்பு ரூ. 8.57 கோடி. 1957-ல் ரூ. 5.56 கோடி. 1958-ல் ஆகஸ்ட்

(16-ம் பக்கம் பார்க்க)

உலகப் பிரசித்திப் பெற்ற சத்துணவு பானமான ஆல்விடோன் தயாரிப்பாளர்கள் தேனும்பேட்டை அகில இந்திய பொருட்காட்சியில் நடத்தும் ஸ்டாலில் விரும்பிப் பருகும் பார்வையாளர்களைக் காண்கிறோம்.

## சுகந்த ஸ்நானப் பொடி

—[கே. ஜி. ராஜூ]—

தமிழர்கள் மாத்திரமல்ல, தென்னாட்டவர்களான மலையாளிகள், கன்னடியர்கள், தெலுங்கர்கள் யாவருமே இயற்கையோடு இயைந்து வாழக்கூடியவர்கள். பாலைவனத்திலோ, பரந்த மணற் பரப்பிலோ வரட்டு வாழ்க்கைப்புரிகிறவர்கள் அல்ல. நிலவளம், நீர்வளம் மிகுந்த செழுமையான பூமியில் வாழ்ந்துவருகிறவர்களுக்கு இயற்கையான வாழ்க்கை சாதனங்களே பொருந்தும். வரண்ட பாலை பூமியில் வாழ்கிறவர்களுக்கும், பனிப் பிரதேசங்களில் வாழ்கிறவர்களுக்கும் இயற்கை சாதனங்களன்றி செயற்கை சாதனங்கள் பலன் தருவனவாய் இருக்கலாம். இயற்கையின் அரவணைப்பில் வாழ்ந்துவந்த நம் ஆன்றோர் தற்கால நவநாகரிக ரசாயனங்களையோ, செயற்கைப் பொருள்களையோ உள்ளுக்கும், புறத்திற்கும் உபயோகித்ததில்லை. அதனால் அவர்கள் நீடூழிவாழ்ந்தார்கள், நோய் நொடிகளின்றி திடகாத்திரர்களாய் விளங்கினார்கள். அவர்களைப்போல் நாம் வாழ இயற்கைப் பொருள்களை உபயோகிப்பதே சிறப்பு. எனவே, சோப்பிலும், சுனோவிலும், லிப்ஸ்டிக்கிலும், விருப்பமுறுவதைவிட, நம்நாட்டு இயற்

Telegrams: Marigold

Phone: 31738.

**K. Perumal Udayar**

Importer, Exporter & Manufacturers' Representative

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்.

K. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

கைப்பொருள்களை உபயோகித்து வர முற்படுவோம். சுகந்த ஸ்நானப்பொடி பெரும்பாலும் வேர்களாலும் வித்துக்களாலும் ஆனவை. வேர்களும், வித்துக்களும் உடலை வளர்த்து உயிரைக் காக்குமென்பதில் நாம் ஐயங்கொள்ளத்தேவையில்லை.

## செய்பாகம்

வெட்டிவேர், விளாமிச்சவேர், நன்னாரி, மரு, மருக்கொழுந்து, ரோஜாமொக்கு, கஸ்தூரி மஞ்சள், கிளியூர்ம் பட்டை, லவங்கப் பட்டை, மாகாளிக் கிழங்கு மஞ்சிஷ்டை, ஏலக்காய் அனுசிப்பூ, பூலாங்கிழங்கு, கிராம்பு, ஜாதிக்காய், சோம்பு, பச்சைப்பயிறு, சடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, திரவியப் பட்டை, சண்பகமொக்கு, கார்போக அரிசி, கவுளா, தாளிசபத்திரி, கோஷ்டம், சிறுநாகப்பூ, சந்தனத்தூள், வெந்தயம்.

மேலே குறிப்பிட்டவைகளில் வகைக்கு ½ அல்லது ¼ பலம் வீதம் வாங்கி வெயிலில் உலர்த்தி இடித்து சலித்து பாக்கெட்டுகளில் அடைத்து அல்லது டின்களில் அடைத்து விற்பனைச் செய்யலாம்.

ஸ்நானம் செய்யும் காலங்களில் தூளை சந்தனம் போல் குழைத்து தேகத்தில் தேய்த்துக் கழுவிவிட, வியர்வையால் படிந்துள்ள அழுக்கு, தேமல், சொறி, நமைச்சல், சிறங்குபோன்ற சர்மரோகங்களை நிவர்த்தித்து சுகாதாரம், சுத்தம், சுகந்தம் இவற்றைத்தந்து மனோஉத்சாகத்தை யளிக்குமென்பது திண்ணம்.

# குறள் தரும் இன்பம்

## 2. இறைமாட்சி

திருவள்ளுவர் சூன்ய வாதியல்ல; பழுத்த ஆத்திக வாதியே யென்பதை 'இறைமாட்சி' யென்ற தொடக்கப் பகுதி விளக்குகிறது. அவர் இறைவனை உருவமைப்பில் குறிப்பிடவில்லை. உலகக் கண்ணோட்ட வாதியாதலால் குணங்களால் குறிப்பிடுகிறார்.

### "கோனார்"

ஆதிபகவன்—கடவுள்.

வாலறிவன்—தூய்மையான அறிவுவடிவாய் விளங்குகிறவன்.

மலர்மிசை ஏகினான்—மனமாகிய மலரில் (தாமரையில்) வீற்றிருப்பவன்.

தனக்குவமை இல்லாதான்—தனக்கு ஒப்பாருமிக்காருமற்ற தலைவன்.

அறவாழி யந்தணன்—அறக்கடலாக விளங்கும் கடவுள்.

இறைவன்—எல்லாப் பொருள்களிலும் இலங்குகிறவன்.

வேண்டுதல் வேண்டாமை இலான்—விருப்புவெறுப்பு அற்றவன்.

பொறிவாயிலைந்த வித்தான்—ஐம்பொறிகள் மூலம் பிறக்கும் ஆசைகளை வென்றவன்.

எண் குணத்தான்—தன் வயப்படுதல்போன்ற எட்டு வகை குணங்களையுடையவன்.

இவ்வாறெல்லாம் குண நலன்களில் குறிப்பிட்டிருப்பதை சமத்துவ மனநிலையில் உய்த்து நோக்குவோர், வள்ளுவர் கடவுள் நம்பிக்கையுள்ளவர் என்ற முடிவுக்கே வருவர். ஒருதலையாய கண்ணோட்டத்தோடு குறளுக்குத் திரிபுப்பொருள் கற்பிப்போரை நாம் குறைகூறுவதற்கில்லை. பகலென்று ஒன்று உள்ளவரையில் இரவு என்று ஒன்று இருக்கத்தான் செய்யும் என்பதை

நாம் நன்கறிந்திருக்கிரு மல்லவா?

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

அகரத்தை அடிப்படையாய்க்கொண்டவைகளே எழுத்துக்கள், அதேபோல் உலகம் ஆதிபகவனுன இறைவனின் அடிப்படையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த முதற்பாவைக் குறித்து சர்ச்சைகள் எழுகின்றன. ஆதி, வள்ளுவரின் தாய், பகவன், வள்ளுவரின் தந்தை; தாய் தந்தையரை வணக்கத்திற்குள்ளாக்கிப் பாடப்பட்ட தென்கின்றனர் சம்சயவாதிகள். அன்னையும், பிதாவும் முன்னறிதெய்வம் என்பது மூதுரையே யன்ரு! இறைவனை எந்த உருவில் வணங்கிலுல் தான் என்ன? தாயாய் வணங்கிலும், தந்தையாய் வணங்கிலும் வணக்கம் வணக்கமேதான். வணக்கத்திற்குரியபொருள் ஒன்றேதான்.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்கும் உடல் உயிர் அனைத்தும் ஈசன்கோயில்"

என்ற ஆன்ருேரின் அறிவுரை இறைவன் தன்மையை எடைப்போட்டுக் காட்டுகிற தன்ருே!

தாய் தந்தையர் தாமென்ன? கண்ணுக்குத் தென்படும் காட்சிப் பொருள்கள் யாவுமே இறைவனின் இருப்பிடமென்பது ஆன்ற அறிஞர்களின் கருத்தாகும்.

"நோக்கும் திசை முற்றும் நாமின்றி வேறில்லை நோக்க நோக்கக் களியாட்டம்"

என்ற பாரதியார் கூற்று அந்த பரந்த மனப்பான்மையை விளக்குவதே.

தாயையும் தந்தையையும் முன்னவர்களாய்க் கொண்டு வணங்கி தன் முயற்சியைத் துவங்கும் வள்ளுவர் அடுத்துடுத்து '(வாலறிவன், மலர்மிசை ஏகினன், தனக்கு வமை இல்லாதான், அறவாழியந்தணன், இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயிலைந்தவித்தான், எண் குணத்தான்" என்றெல்லாம் குறிப்பிட்டு வணங்குகிருரே, அவர்களெல்லாம் யார் யாரோ!

மற்ருெரு விச்சித்திர வாதம்: பகவன், மேல் குலத்தவன்; ஆதி, கீழ்க்குலத்தவள்.

இவர்களுக்குப் பிறந்தவர் வள்ளுவர் என்பது. இந்தக் கூற்று உண்மையானால் மேல் குலத்தவர்கள் என்பவர்களிடையே பகவன் என்ற பெயர் வழங்கப் படவேண்டுமே? கீழ்க்குலத்தவர்களிடையே ஆதியென்ற பெயர் அனுபவத்திலிருக்க வேண்டுமே? என்ற ஐயப்பாட்டை எழுப்புகின்றன.

இது அர்த்தமோ, பொருத்தமோ அற்ற வாதம் என்பது மிகையல்ல.

ரிஷிமூலம், நதிமூலம் விசாரித்தல் ஆகாதென்பது பண்டைய மொழி. பெருமக்களெனப் போற்றப்படும் பலரின் பிறப்பு வளர்ப்பு பெருமைப் படத்தக்கதாய் இருப்பதில்லை. அறிவாலும் ஆற்றலாலும் உயர்ந்தவர்கள் எக்குடிப்பிறந்திருந்தாலென்ன? எவ்வாறு வளர்ந்திருந்தால் தான் என்ன? காலம் மாறுந்தன்மையது. இன்று புதுமையாய்த் தோன்றுவது நாளை, பழமையாகி விடுகிறது. வழக்க ஒழுக்கங்களில் கூட மாற்றங்கள் ஏற்படுகின்றன. பண்டைக்காலமக்கள் வைத்தப் பெயர்களை இக்கால மக்கள் எங்கே அனுசரிக்கின்றனர்? வள்ளல் பெருமக்களென்று நாம் இன்றும் பாராட்டும் பாரி, ஓரி, காரி, குமணன், நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்பன போன்ற பெயர்களைத் தாங்கியவர்களாய் இக்காலத்தில் யாரேனுமிருப்பதாய்க் கூற முடிகிறதா? அந்த மாபெரு வள்ளல்களின் பெயர்களையே தங்கள் மக்களுக்கு வைக்கும் அளவுக்கு பிற்காலத்தவர் மனநிலை இல்லையென்பது விளங்குகிறதல்லவா?

அவ்வப்போது ஏற்படும் மாற்றத்தை நாகரிகமென்றும், புதுமையென்றும்


மணம், குணம் ஒருங்கே அமைந்த

**மரகதம்**

**காபியை**

**உபயோகியுங்கள்**

மொத்தமாயும், சில்லரையாயும் கிடைக்கும்
அன்றாடம் வறுத்து
அரைத்து கொடுக்கப்படும்

**K. ராமசாமி உடையார்,**
பூரண உரிமையாளர்,
**மரகதம் காபி ஒர்க்ஸ்**
**கரூர்.**

நினைப்பது மனித இனத்தின் மாண்பு.

தன் பெயர் சுாளிமுத்து என்றிருந்தால் அதை நாகரிகக் குறைவாய் எண்ணி, தன்மகனுக்கு மனோஹர் என்றோ, சேகர் என்றோ பெயர் வைக்கும் அளவுக்கு மனித மனம் மாறுபாடடைகிறது.

**தனக்குவமை இல்லாதான்:** தனக்கு ஒப்பாரு மிக்காரு மற்றத் தலைவன்.

மனித சக்திக்கு ஆதீதமான சம்பவங்கள் பல நடக்கின்றன. காரணமில்லாமல் காரியம் நிகழ்வதில்லை.

அணு குண்டு, ஜலவாயு குண்டு, பூவுலகையே சுற்றி வரும் செயற்கைச் சந்திரன் (Sputnic) இவற்றையெல்லாம் உற்பத்திப்பண்ணும் விஞ்ஞானிகள் புயல், பூகம்பம், வெள்ளப்பெருக்குப் போன்ற விபரீத நிகழ்ச்சிகளைத் தடைப்படுத்தி விடுவதுதானே? இவையெல்லாம் இயற்கைக் கோள்களின் விளைவுகளெனக் கூறப்படுகிறது. அந்த இயற்கையே மனித இனம் உள்ளிட்ட சகல ஜீவ வர்க்கங்களையும், நிலம், நீர், நெருப்பு, ஆகாயம் யாவற்றையும் ஆட்டிப் படைக்கும் அதித சக்தியான கடவுள் தன்மை. இத்தகைய மகத்தான நிகழ்ச்சிகளின் ஆதாரத்தைக்கொண்டு அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த இறைவனை 'தனக்குவமை இல்லாதான்' என்று கூறுதல் எவ்வளவு பொருத்தமுடையதென்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ!

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் ரூ. 3.59 கோடி. 1953-ல் 280 லட்சம் கெஜம் துணி இலங்கை இறக்குமதி செய்தது. 1957 ஆகஸ்ட் வரையில் 84 லட்சம் கெஜம் துணியே இந்தியாவிலிருந்து இலங்கையில் இறக்குமதியாயிற்று. இலங்கை, கிழக்கு ஆப்ரிக்கா, தென் கிழக்கு ஆசியா. மேற்கு ஆப்ரிக்கா, மத்ய கிழக்கு முதலிய நாடுகள் சென்ற பல ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து துணி இறக்குமதி செய்து வந்திருக்கிறது.

தனியார். துறையைச் சேர்ந்த கைத்தறி உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அவற்றின் மூலமாக பல கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் ஸ்ரீ வெங்கட்ராமன் கூறினார்.

## முன் கதை............

உறுப்பினர் * * * *

லலிதா : பி. ஏ; கணேசன் : பி. ஏ; சாந்தா : பி. ஏ.

சர்க்கார் காரியாலய குமாஸ்தாவாய் பணிபுரிந்து உபகாரச் சம்பளம் பெற்றவரான சுந்தரம் சரஸ்வதி மில் மானேஜராய் நியமிக்கப்படுகிறார். மகள் லலிதாவின் கல்யாண சமபந்தமாய் தாயும், தந்தையும் மனவேற்றுமை கொள்ளுகின்றனர். குடி வெறியனான தம்பிக்கு, தன் பெண்ணைத் தர தாய் விரும்புகிறாள். தந்தை மறுக்கிறார். இந்நிலையில் லலிதாவின் பள்ளித்தோழியான சாந்தா அவளிடம் வந்து ரஞ்சித் மஹாலில் நடக்கும் மஞ்சரியின் நடனத்தைப் பார்க்க அழைத்துப் போகிறாள். ரஞ்சித் மஹாலில் சாந்தாவின் சகோதரனான கணேசனின் அறிமுகத்தைப் பெறுகிறாள் லலிதா.

அந்த விநாடி முதல் லலிதா ஓர் வகை புது உணர்ச்சிக்குள்ளாகி விடுகிறாள்.

மறுநாள் லலிதா, சாந்தாவை காணும் சாக்கில் முற்பகல் வெயிலையும் பொருட்படுத்தாமல் நடக்கிறாள். எதிரே கார் ஓட்டி வரும் கணேசனைக் கண்டு திகைக்கிறாள். முன்னமேயே அறிமுகமாகி விட்டவர்களல்லவா? அவனும் காரை அருகே கொண்டு வந்து நிறுத்தி அவளை ஏற்றிச் செல்கிறான். தனி விடத்தில் அமர்ந்து தாராளமாய் மனம் விட்டுப் பேசி பிரிகின்றனர்.

* * * * *

அடுத்து நடப்பனவற்றை தொடர்ந்து படியுங்கள்:

## 9 ⁘ கொஞ்சும் கிளியும், கொத்தும் பெரியும் ⁘

அமரநாத் பூங்கா பார்க்க நல்ல வசீகரமானது. மாலை வேலையில் பொழுது போக்கிற்கு உல்லாசமான இடம் அது. பூங்காவின் உள்ளே கண்ணைக் கவரும் அழகிய மலர்க் கொடிகள் படர்ந்து வளர்ந்திருந்தன. எத்தனையோ விதமான வண்ணப் பூச் செடிகளும் அங்கே இடம் பெற்றிருந்தன. 'குரோடன்' என்று கூறப்படும் வண்ண இலைச் செடிகள் வேறே வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன. ரேடியோ கானம் முழங்கியது. வண்டுகள் ரீங்கார மிட்டன. மாந்தர் பவனி வந்தனர். பூங்காவினுள்ளே செடிகளாலேயே பாதைகளை வகுத்திருந்தார்கள். கண்டவிடங்களிலெல்லாம் நீளமான சிமெண்ட் சாய்வு பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. பல அழகிய சிற்பங்கள் நிறுத்தப்பட்டிருந்தன அவற்றின் கையிலுள்ள குழாய்கள் வழியாய் பன்னீர் தெளிப்பது போல் நீர் பீறிட்டுக் கொண்டிருந்தது. மெர்க்குரி விளக்குகள் அங்கங்குப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. இத்தனை சோலைகளுடன் விளங்கும் அமரநாத் பூங்கா இயற்கை அழகின் உறைவிடமாய்க் காணப்பட்டது.

கணேசன் காரை வெளிப்புறத்தில் நிறுத்தினான். இருவரும் இறங்கினார்கள். கணேசன் லலிதாவின் தோள் மீது கரத்தைப் போட்டுக்கொண்டு ஏகாந்தமாக உள்ளே நுழைந்தான். இயற்கையின் அழகு இருவரின் உள்ளங்களை அள்ளிப் பறித்தது. திருப்பங்களினூடே சென்று மாலைப்பொழுதின் மகோன்னத தோற்றத்தைக் கண்டு ரசித்தார்கள். ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத இடத்தை நாடி அமைதியாய் உட்கார்ந்தார்கள். அவர்களுக்கெதிரில் அழகாக பூத்திருக்கும் முல்லை மலர்களைக் கண்டு எழுந்துசென்று பறித்தான் கணேசன். வைரம் பதித்ததுபோல் அவள் அஜந்தா கொண்டையைச் சுற்றி ஒவ்வொரு மலராக சொருகி அழகு பார்த்தான். அப்போது இரவு நேரம் மலர்ந்து விடவில்லை. மாலைப் பொழுதும் மறைந்து விடவில்லை.

பார்க்குக்குள் எத்தனையோ சீமான்-சீமாட்டிகளும், ஜதை ஜதையான மைனர் தம்பதிகளும் உல்லாசப்பொழுது

போக்கிற்கு வந்து குவிந்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பெஞ்சுகளில் அமர்ந்து ரேடியோ கானத்தை ரஸித்துக் கொண்டிருந்தனர்.

மாலைப் பொழுது எவ்வளவு நேரம்தான் நீடித்திருக்கும்? எப்படியோ மறைந்து விட்டது.

இரவுகாலம். மணியும் சற்றேறக் குறைய எட்டு இருக்கும். தென்றல் சிரித்து விளையாடியது. பூங்காவின் சாய்வு பெஞ்சில் கணேசன் சாய்ந்திருந்தான். லலிதா அவன் மார்பகத்தில் தலைசாய்ந்து வானத்தை உற்று நோக்கியபடி இருந்தாள். சந்திரன் அடித்தளத்தைவிட்டுப்புறப்படவில்லை தாரகைகள் மாத்திரம் 'பளிச் பளிச்' சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. அப்போது லலிதாவின் உள்ளத்தில் ஏதோ ஓர் எண்ணம் ஊசலாடிக் கொண்டிருந்தது. எண்ணத்தை வெளியிட அவள் தயக்கம் கொண்டாள். கண்களிலே கண்ணீர் பெருகி முத்து முத்தாக அவள் மேலாடையை நனைத்தது. லலிதாவை அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்த கணேசனின் கைகளில் கண்ணீர்த்துளி சிதறிவிழுந்தது. திடுக்கிட்டான். மாசற்ற வானத்தில் நட்சத்தி

ரங்கள் ஜெகஜோதியாய்த்தான் பூரித்திருந்தன. மழையின் அறிகுறிக்கு முகிலின் பவனியில்லையே என்று லலிதாவை நோக்கினான். அவள் கண்களில் நீர் கலங்கி வழிந்தோடிக் கொண்டிருந்தது.

"லலிதா! உன் கண்களில் கலக்கம் ஏன்? எதற்காக? நீ தவறி நடந்து விட்டதாய் எண்ணி மனம் சஞ்சலப்படுகிறாயா?" என்றான் கணேசன்.

"கணேஷ்! என்னை மன்னிக்கவேண்டும். எத்தனை நாள், நான் என் பெற்றோரிடம் பொய் சொல்லிவிட்டு உங்களைத் தேடி வருவது? நான் பெற்றோர் பிடியிலிருந்து விடுதலையாக வேண்டாமா? என்றோ ஓர் நாள் நம் காதல் வெளியாகத்தானே போகிறது? காதலை வளர்த்தோம், கருத்தை பரிமாறிக்கொண்டோம். நான் தவழ்ந்தேன் உங்கள் மடியில்! உங்களைக் கட்டித்தழுவி சுகம் அனுபவித்தது என் கரங்கள்? நான் மணமாலை சூடி தங்களுடன் தலை நிமிர்ந்து செல்லவேண்டும்! தாங்கள் மனமார ஏற்றுக்கொள்வீர்களா? அல்லது கை நழுவ விடுவீர்களா? சொல்லுங்கள், என்னிடம் ஏதோ போலியாகத்தான் பழகுகிறோம் என்ற எண்ணம் கூடாது. அதனால் நம்மிருவர் வாழ்க்கையும் கலங்கமடைந்து விடும். ஓர் பெண்ணின் கற்பை சூறையாடிய பிறகு உதைத்து தள்ளும் நயவஞ்சகர்கள் எத்தனையோ பேர்கள் நாட்டில் இருக்கிறார்கள். அந்த கதிக்கு நான் ஆளாக விட வேண்டாம், கணேஷ்" என்றாள் சோகம் ததும்பிய குரலில் லலிதா.

"லலிதா! நீ படித்தவளாய் இருந்தும் முட்டாளைப்போல் பேசுகிறாயே!நான் என்ன ஊதாரியா? ஒன்றுமறியாத உலுத்தனா? நம்பியவளை கைவிடக்கூடிய நாச புத்தி படைத்தவனா? நான் உன்னை விரும்புவது குணத்தை முன்னிட்டுத்தான். பணத்தை முன்னிட்டல்ல. பணம் இன்றிருக்கும், நாளை போகும். நான் ஏழையல்ல; ஓரளவு பணவசதியுள்ளவன்தான். நீயும் அப்படியே! நம் மிருவர் உறவும் எல்லா வகையிலும் ஒத்தது. அதை உணர்ந்துதான் என் அன்பை உனக்கு அடைக்கலம் தந்தேன்! விடியாத என் வாழ்க்கையில் நீ விடி வெள்ளியாக தோன்றி விட்டாய்! எவளோ அனுபவிக்க வேண்டிய சுகத்தை உனக்குக் காணிக்கையாய்

# M. சுப்ரமண்யம் & பிரதர்ஸ்

## (ஞானம்பிகா பிராண்டு)

ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்

மூர்மார்கெட்,

சென்னை-3.

(அரசாங்க அங்கிகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட் கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி: நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3

ஷாப்: நெ. 15- பிளாக்கு மூர்மார்கெட், சென்னை -3.

இங்ஙனம்.

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)

M. கோவிந்தசாமி

M. ராதாகிருஷ்ணன்

சமர்ப்பித்து விட்டேன். என்னையே மறந்தேன்! என் ஆன்மா வில் உயிர் உள்ளவரை வேறு எவளும் இனி இடம் பெற மாட்டாள்! இது சத்தியம்! அச்சத்தை விட்டுவிடு. நம் திரு மணவோலை இன்னும் கொஞ்ச நாளிலே எல்லோர் கண்களி லும் பிரகாசிக்கப் போகிறது" என்று கூறி விட்டு கணேசன் அவள் கண்களில் வழியும் நீரை துடைத்து விட்டான்.

லலிதாவின் கண்கள் மலர்ந்தன. மிரள மிரள பார்த் தாள். அவள் முகம் மகிழ்ச்சியால் பூரித்திருந்தது. "கணேஷ்! இன்று என் இதயம் குளிர்ந்தது! நான் பாக்கிய வதி என்பதை தங்களின் சொல் படம் பிடித்து காட்டி விட்டது" என்று அவ்விடத்தை விட்டு எழுந்திருந் தாள். பூங்காவை வீடாக எண்ணி விட்டாளோ, என்னவோ! ஓடி மறைந்தாள் செடிகளின் மறைவில். காதலர்களின் கொனஷ்டைகள் அனேகம் இடம் பெற்றன அங்கே.

"கணேஷ்! காலம் போனதே தெரியவில்லை. வீட்டில் எனக்காக அப்பாவும், அம்மாவும் எதிர்பார்த்திருப்பார்கள்., புறப்படுங்கள்" என்ருள்.

"சரி லலிதா! கொஞ்சநேரம் கடற்கரை வரை சென்று உலாவி வருவோம்; பின் வீடு செல்லலாம். உன் விருப்பம் எப்படி?" என்ருன்.

"உங்கள் இஷ்டத்திற்கு மீறியா பதில் சொல்லப் போகிறேன்" என்ருள்.

கார் கடற்கரையை நோக்கி சென்று நின்றது. மயக்கும் மாலைப்பொழுதில் ஆழியின் எழிலை ரசித்துவிட்டுத் திரும் பிக் கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் எதிர் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கணேசனும் லலிதாவும் கடல் மணற்பரப்பின் மீது கை கோர்த்து நடந்து சென்ருர்கள். வண்ண எழிலை வாரி வழங்கிக்கொண்டு அடித்தளத்தை விட்டு விண்ணைநோக்கி வந்துகொண்டிருந்தான் சந்திரன். அந்த நிலா வெளிச்சத்தில் பெரும் இரைச்சலுடன் மோதி வரும் அலைகள் ரஸிக்கக்கூடியதாய் இருந்தது. கொஞ்ச நேரம் கடல்நீரில் கால்களை நனைத்துக் கொண்டு நின்

திருந்தார்கள். அலைகளின் 'ஓ' வென்ற சப்தம் கடற்காற்றிலே பள்ளுபாடியது.

மணி ஒன்பது ஆகிவிட்டது. கடற்கரையை விட்டு பெரும்பாலும் ஜனங்களும் வெளியேறி விட்டார்கள். கணேசன், லலிதாவின் தோள் மீது கை போட்டுக்கொண்டே கார் நிறுத்தியிருக்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

வழியில்..................

எதிர்ப்புறமாய் வந்து கொண்டிருந்த முகமறியாத ஒருவன் அவர்களை திடீர் என்று நின்று முறைத்துப் பார்த்தான். அவன் அப்படி பார்த்தது அவர்களுக்கு விளங்கவில்லை. அவனும் தன் முகத்தை வெளிப்படையாகக்காட்டிக் கொள்ளவில்லை. இவர்களுக்கு முன்னால் சென்று தொலை தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான் அவன். இருவரும் காரில் ஏறினார்கள். புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டு சிட்டாக பறந்தது கார் வீட்டை நோக்கி.

அவர்களை முறைத்துப் பார்த்தபடி நின்றிருந்த அந்த மனிதனின் நெஞ்சு விம்மி யழுந்தியது. "குலத்துரோகி! படித்தாளாம், பட்டப்படிப்பு! இப்போது தெரிகிறது அவள் படித்ததின் யோக்கியதை! கண்டவனுடன் கைகோர்த்து நாலுபேர் முன்னிலையில் தலை நிமிர்ந்து போகிறாளே வெட்கங்கெட்டவள்! நாகரிகம், நாகரிகம் என்று சதிராடினாளே,


காரம், மணம், குணம், நிறைந்த கமலம் ஊறுகாயை
உபயோகித்துப் பாருங்கள்

கமலம் ஊறுகாய்
சென்னை-1
தயாரிப்பாளர்: K. திருநாவுக்கரசு

நெ. 4, வெங்கடேச மேஸ்திரி தெரு, சென்னை-1.

ஆர்டர்பேரில் தயார் செய்து கொடுக்கப்படும்

இந்த உல்லாச கணவனிடம் கொஞ்சுவதற்கான ஒத்திகையா அது? சுந்தரம் கௌரவத்தின் நிழலிலே வாழ்ந்து வருகிறார். ஆனால் அவர் மகள் கௌரவத்திற்கு வினை எழுப்பிவிட்டாள்! எனக்காக என் அக்காள் பல தடவைப் பரிந்து பேசிய போதெல்லாம், குடிகாரன், பிழைக்கத் தெரியாதவன் என்றெல்லாம் கேவலமாகப் பேசிவிட்டார். ஆம்! பெண்ணைப் பெற்று நாடோடியாய் சுற்றிவர விட்டு விட்ட சுந்தரம் அவளிடமே மாப்பிள்ளை தேடும் பொறுப்பையும் விட்டு விட்டார் போலிருக்கிறது! அவர் இதற்குத்தானா காலேஜ் வரை படிக்க வைத்தார். "படிப்பு வாசனையில்லை, கூத்திக்கள்ளன், அவனுக்கா நான் வாழ்க்கைப்பட வேண்டும்' என்று என் அக்காளையே எதிர்த்தாளே, இந்தக் கள்ளக் காதல் புரியும் கபடசித்தக்காரி!...உம்! கண்டவனை கணவனாக ஏற்றுக்கொண்டாளே இவளா குலவிளக்கு? பார்க்கிறேன் இனி இவள் வெளிவருவதை" என்று அங்கலாய்த்தான். அவன் யார் என்று நாம் விவரிக்க வேண்டியதில்லை. மாமன் சிவகுமார்தான் மனம் பதைக்க அவ்வாறு பேசினான் என்றால் அது வியப்புமல்லவே!

சிவகுமார் அவர்களைப் பின் தொடர்ந்து ஓர் டாக்ஸியில் போனான். தன் அக்காள் இருக்கும் வீதி முனையிலே போய் நின்றிருந்தான் ஓர் ஒதுக்குப்புறத்தில். அவன் நின்ற கால் மணி நேரம் கடந்து கணேசன் கார் அவ்வீதியில் நுழைந்து லலிதா வீட்டண்டை நின்றது. லலிதா கதவைத் திறந்து கொண்டுவீட்டினுள் சென்றாள். காரை ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத அளவுக்கு வேகமாய் ஓட்டினான் கணேசன்.

அந்தக் காட்சியைப் படம்பிடித்து நின்றசிவகுமார், தன் அக்காள் பெண் நடத்தும் காதல் நாடகத்தை சுந்தரத்திற்கு அம்பலப்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தான்.

"காரியம் முற்றியல்லவா போய் விட்டது! இது எவ்வளவு காலமாய் நடக்கும் காதல் லீலையோ தெரியவில்லையே? பாவம்! சுந்தரம் ஓர் அப்பாவி மனிதனாக இருந்து விட்டார்! இந்த விஷயம் அவர் காதில் பட்டாலே போதும்"

# வ. உ. சி.
# கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

தலைவர்களின் சிலைகள்
பொம்மைகள்
சிறந்த வர்ண ஓவியங்கள்
சினிமா ஜோடனைகள்
முதலிய கலைப் படைப்புக்களுக்கு சிறந்த தோர்

## கலைக் கோயில்
## விரைவில் திறக்கப்படும்

உரிமையாளர் :

**R. T. கிருஷ்ணமூர்த்தி**

அணுகுக :

**வ. உ. சி. கலைக்கூடம்**

பூந்தோட்டம்,
35/60, சந்நிதி தெரு, வடபழநி,
சென்னை.

என்று தன் மீசையை தடவி விட்டுக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான் சிவகுமார்.

## 10 ❋ சகுனியின் சாணக்கிய வேலை ❋

**கா**ரை விட்டு இறங்கிய லலிதா நேரே மாடிக்கு போய் விட்டாள். கூடத்திலே சுந்தரம் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். சுசிலா, ஊன்றிய தன்கையால் முகவாய்க் கட்டையை தாங்கியபடி அதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். மகள் விழுந்தடித்துக் கொண்டுபோவதை பார்த்துவிட்டு கணவனும், மனைவியும் ஏனோதானோவென்று இருந்து விட்டார்கள்.

ஆடைகளை மாற்றிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள் லலிதா. படித்துக் கொண்டிருந்த சுந்தரம் புத்தகத்தை சுசிலாவிடம் கொடுத்து அலமாரியில் வைக்கச் சொன்னார். லலிதாவும் தந்தை அருகில் வந்து நின்றாள்.

''லலிதா, காலா காலத்தில் வீடு

வந்து சேருவதில்லையா? ஒரு வயசுவந்தப் பெண் இன்னேரத்தில் தனிமையாய்வருகிருயே? வழியிலேகாலிப் பயல்கள் ஏதாவது இடைஞ்சல் கொடுத்தால் உன் நிலைமை என்னவர்கும்? யோசித்தாயா? பகல் நேரத்தில் எங்கு சென்று வந்தாலும் பாதகமில்லை" என்ருர் சுந்தரம்.

"அப்பா! அந்த பயம் தங்களுக்குவேண்டாம்! அவர்கள் காரிலேயேகொண்டு வந்து விட்டார்கள் இப்போ! நீங்கள் பார்க்கவில்லையா? ஒரே கூட்டமப்பா! காலேஜ் மாணவிகள் இதுவரை இவ்வளவு பிரமாதமாய் நடித்ததே இல்லை" என்ருள் லலிதா

"அப்படியா! அந்த நாடகத்

தில் உனக்கென்னம்மா வேடம் கிடைத்தது?" என்றார் குறும்பாக சுந்தரம்.

வெட்கமாய் விட்டது லலிதாவுக்கு."மேக்கப் செய்வதில் உதவியாய் இருந்தேன்" என்றாள் சாமர்த்தியமாக.

"பயித்தியக்கார பெண்ணம்மா நீ! இன்னும் விளையாட்டுப் புத்தியை மறக்காமலிருக்கிறாயே! போ......போ. சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு பக்கத்தில் இருக்கும் சோபாவில் படுத்தார் சுந்தரம்.

சுசீலாவும், லலிதாவும் சாப்பிட்டுவிட்டு மாடியிலுள்ள தம்தம் அறைக்கு சென்றார்கள்.

* * * *

நாட்கள் இரண்டு ஓடின. சுந்தரம் ஆபீஸ் சென்று ஒரு மணி நேரம் இருக்கும். தபால்காரன் ஆபீஸ் கடிதங்களுடன் ஓர் ரிஜிஸ்டர் கவரையும் கொண்டுவந்தான். அந்த ரிஜிஸ்டர் சுந்தரத்திற்கே பிரத்தியேகமாக வந்துள்ளது. அதனால் அவரே கையெழுத்திட்டு வாங்கினார். கவரை பிரித்தார். கடிதத்தின் மேல் முகட்டில் அவருக்கு ஜன்மவிரோதியின் பெயர் காணப்படுவதைக் கண்டு திடுக்கிட்டார்.

சிவகுமாரன், 30, வெங்கடராம அய்யர் தெரு,
நாகை.

அன்புள்ள மாமா அவர்கட்கு,
வணக்கம் பல.

தாங்கள் கௌரவமான உத்தியோகத்தை மேற்கொண்டதை கேள்வி பட்டதிலிருந்து நான் பெருமைப் படுகிறேன். அதே சமயத்தில் வேதனையும் படுகிறேன். ஏன்? தாங்கள் ஓர் அப்பாவியாக வாழ்கிறீர்களே என்றுதான்! என்னைப்பற்றியோ, என் குடும்பத்தைப்பற்றியோ தாங்கள் கேவலமாக பேசலாம்—பேசுவதற்கு நான் உரிமையும் கொடுக்கிறேன். நீங்கள் தான் வேறே யார்? என் மாமா, அக்காள் புருஷன். ஆனால் தங்களைப்பற்றி, தங்கள் குடும்பத்தைப்பற்றி வேறு பலர் நையாண்டி செய்து விடுவார்களே என்று தான் வருத்தப் படுகிறேன். தங்கள் கௌரவத்திலே என் அக்காள் நாலு

பேர் மதிக்க வாழ்கிருள். ஆனல் தங்களேயும் அக்காளே யும் தலே குனிய வைக்கும்படி ஓர் பெண்ணே பெற்று வைத்திருக்கிறீர்களே, அதுதான் உங்கள் துரதிர்ஷ்டம்.

நான் குடிகாரனய் இருக்கலாம்; கூத்திக்கள்ள ஞகவுமிருக்கலாம். தங்கள் பெண்ணே நான் மணக்க என்ன அருகதை இருக்கு என்று மார் தட்டினீர்கள். வாஸ்தவம். ஆனல் இன்ருே உங்கள் பெண்ணே நான் கூட ஏறிட்டுப்பார்க்க யோக்கியதை இல்லாமல் போய்விட்டது. எவனுடனே கை கோர்த்து கடற் கரையில் உல்லாசமாகத் திரிந்து வரும்படி விட்டு விட்டீர்களே, அதை எண்ணிப்பாருங்கள். ஊர் சுற்றித் திரிகிறவளும், கண்டவர்க்குக் காதலியுமான உங்கள் பெண்ணே நான் என்ன; கீழான அந்தஸ்திலுள்ளவன் கூட மணக்க முன் வரமாட்டான். உங்கள் மகளின் தகாதச் செய்கையை என் கண்ணுரக்கண்டேன். எந்தக் காதலனுடன் கை கோர்த்து வந்தாளோ அதே காதலன் தான் நேற்று இரவு பத்து மணிக்கு தன் காரில் ஏற்றிக் கொண்டு வந்து தங்கள் வீட்டில் அவளே விட்டுச் சென்றிருக்கிருன். மாமா! அடியே னுக்கு ஒரு சந்தேகம். கோபிக்காமல் பதில் எழு துங்கள். நீங்கள் மாப்பிள்ளே தேடிப் பிடிக்காமல், அவ ளேயே தேடிக்கொள்ளும்படி விட்டு விட்டீர்களா? நீங் கள் எங்கே? தங்கள் பெண் எங்கே? உங்கள் கவுரவ மெங்கே? தங்கள் பெண்ணின் கள்ளக் காதலெங்கே? இப்பேர்ப்பட்டப் பெண்ணே பெற்று வளர்த்து வைத் திருக்கிறீர்களே? கேவலம்...கேவலம். அவமானம்....... அவமானம். ஆனல் இனியும் கண்மூடிக்கொண்டிருக்க வேண்டாமென்று தங்களே கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு உங்கள் மைத்துனன், **சிவகுமார்.**

கடிதத்தைப் படித்து முடித்தார் சுந்தரம். அவர் தலே சுழன்றது. இருதயம் துடித்தது. கண்கள் இரண்டும் கனலே கக்கின. அங்கிருக்கவே பிடிக்கவில்லே. கடிதத்தை மடித்து கவரிலே போட்டுக் கொண்டார். ஆபீஸ் வேலேகளே கவனிக்க அவரால் முடியவில்லே. அவர் சிந்தனே எது ரதிலோ வெல்லாம் மோதிக்கொண்டிருந்தது. தன் எதிரிலே லலிதா இருந்து விட்டால் கசக்கியே பிழிந்தெடுத்

திருப்பார். முக்கியமான வேலைகள் சிலவற்றை கவனித்து விட்டு பகல் இரண்டு மணிக்கு வீட்டிற்கு புறப்பட்டு வந்தார் சுந்தரம்.

லலிதா வீட்டில் இல்லை. சுந்தரம் வருவதற்கு முன்பே தான் தன் சினேகிதி வீட்டிற்கு போய் வருவதாக வெளியில் சென்று விட்டிருந்தாள். வீடு வெறிச்சோடியிருப்பதைப் போல் இருந்தது. சுசிலா தோட்டத்தில் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தாள்.

''சுசிலா!...சுசீலா!'' வென்று பெருத்த குரல் கொடுத்தார் சுந்தரம். அந்தக் குரலில் ஆக்ரோஷம்கலந்திருந்தது அப்போது. தன் கணவனின் குரலைக் கேட்டு வேலையை அரைகுறையாய்விட்டு அலங்கோலமாய் ஓடிவந்தாள் அவள்.

''உன் மகள் லலிதா எங்கே? எங்கே அனுப்பிவிட்டாய்?'' என்று கேள்விகளை அடுக்கினர் சுந்தரம்.

சுசிலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ''அவள் இப்போது தான் அவள் சினேகிதை வீட்டிற்கு போய் இருக்கிருள்'' என்ருள். அவள் பதில் நடுக்கத்தை காட்டியது. ஓர்வகை அச்ச உணர்ச்சி கொண்டாள் அவள்.

''எந்த சினேகிதி வீட்டிற்கு? ஏன் அனுப்பினுய்? பெண்ணை வளர்த்து வந்த லட்சணம் இப்போதான் நல்லா தெரியுது! என் குலப் பெருமையை கெடுத்து விட்டாள்; என் கௌரவத்தையே பாழாக்கி விட்டாள்! வீதியிலே தலை நிமிர்ந்து போகாத வண்ணம் தலை குனியசெய்து விட்டாளே துரோகி! இதற்குத்தானு திருமணம் வேண்டாமென்று தட்டிக்கழித்தாள்? ஏன்? நீயும்தான் சப்பைக்கட்டு கட்டினுய்! நான் மோசம் போய்விட்டேன். சுசிலா, லலிதா உன் பாதுகாப்பில் இருக்கிருள் என்று நினைத்தேனே, உன் பாதுகாப்பு உபயோகமற்றதாய் விட்டது. இதோ பார், உன் தம்பி எழுதிய கடிதத்தை'' என்று அக்கடிதத்தை சுசீலாவிடம் கொடுத்தார் சுந்தரம்.

கடிதத்தை வாசித்த சுசீலாவின் கண்களில் கங்குகரையின்றி நீர் வழிந்தோடியது! அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. திகிலால் நிதானிக்கவும் முடியவில்லை. ''அதற்குத்தான் அப்பவே சொன்னேன், காலாகாலத்திலே சிவகுமாரனுக்கு நம்பப் பெண்ணை கொடுத்து விடலாமென்று.படித்த பெண், படித்த பெண்'' என்று பெருமை யடித்துக்கொண்

டீர்கள். அதோடு எங்களை கேவலமாயும் பேசினீர்கள். அடி பாவி! என்ன துணிச்சல். நான் கூடத்தான் படித்தேன். தாய், தகப்பனுக்கு செல்வப் பெண்ணாய் வளர்ந்தேன். இப்படி குடி கெடுக்கிற வேலையைப் பற்றி எண்ணியதுகூட இல்லையே!" என்று அங்கலாய்த்தவாறு தபாலை சுந்தரத்திடம் திருப்பிக் கொடுத்தாள் சுசீலா.

* * * *

வீட்டை விட்டுச் சென்ற லலிதா கணேசனுடன் அமர்நாத் பார்க்குக்குள் தனிமையான ஓர் இடத்தை யடைந்து அமர்ந்தாள். அந்த இடம் தாமரை மலர்களடர்ந்த தண்ணீர் தடாகத்தின் ஓரமாய் அமைந்திருந்தது. இவர்கள் அமர்ந்தது ஓர் சிமிண்ட் பெஞ்சில்தான். சுற்றியுள்ள பூச்செடிகள் கண்ணைப் பறிப்பதுபோல் காட்சி யளித்தன. லலிதா துள்ளியோடி பூக்களைப் பறிப்பதில் ஈடுபட்டாள். நறுமணம் கமழும் சிலபூக்களை பறித்து சேர்த்த அவள், மேலும் மேலும் தாவித் தாவிப் பறிப்பதில் ஆர்வங் கொண்டாள். அப்போது காற்றில் மிதந்த அவள் மேலாடை வேலியின் கம்பியிலே மாட்டிக்கொண்டது. லலிதா அதை கவனிக்கவில்லை. கணேசனை நோக்கி நடக்க இரண்டடி வைத்தாள். பின்னால் யாரோ இழுப்பது போல் இருந்தது அவளுக்கு. "அடச்சே விடு!" என்று தன்னை யறியாமலேயே அதட்டும் குரலில் கூவினாள் அவள்.

கணேசன் குலுங்க குலுங்க சிரித்தான். திரும்பிப் பார்த்தாள் லலிதா. வெட்கம் மாத்திரமல்ல; வேதனையும் சூழ்ந்து கொண்டது அவளை. மெதுவாக தன்புடவையை விடுவித்துக் கொண்டு அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள் அவள். முகத்தை அவன் பக்கம் திருப்பவேஇல்லை.கொண்டு வந்த பூக்களை கணேசன் எடுத்து அவள் கூந்தலிலே சொருகினான். சில விநாடிகள் அமைதியாய் இருந்த அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

"கணேஷ்! நம் திருமணத்தைப் பற்றி என்ன முடிவு கட்டியிருக்கிறாய்?" என்று கேட்டாள். கண்டிப்பு தொனித்தது அவள் பேச்சில். கடுகடுத்த பார்வை தான், ஆனால் அவன் நெஞ்சிலே சாய்ந்து விட்டாள். அதன் பொருள் விளங்காமல் திகைத்தான் கணேஷ். (வளரும்)

# ATTENTION TO ALL CINE PRODUCERS & DISTRIBUTORS

★

All kinds of Best quality and Longstanding Film Boxes, Spool Boxes, and Film Rocks are available in ready stock at Moderate rate.

Please call at the following places or Phone to 3619

## STAR STEEL TRUNK WORKS

84, Mint Street, Madras-3

No. 305, N. S. C. Bose Road,
China Bazaar, Madras-1

No. 1, Egavalli Ammon Koil Compound,
MADRAS-1

For any other requirements of Cine purposes we undertake to supply and orders will be executed promptly.

SOLICITING AN OPPORTUNITY TO SERVE YOU

# லட்சத்தீவில் விக்ரமன்

—:[சிவகாசி. K. ராமசாமி]:—

காமத்திற்குக் கண்ணில்லை என்பார்கள். காதலுக்கோ, கண் மாத்திரமல்ல காதுமில்லை, கருத்துமில்லை. ஏதுமில்லாத சூன்யமே அதன் முடிவு என்பதை இனிக்கும் தமிழில், எழிலுறும் அமைப்பில் கதையாக வடித்துக் காட்டுகிறார் தன் சிந்தனைத் திறத்தால் கதாசிரியர் ஸ்ரீ ராமசாமி. சூரிய வெப்பம் தண்ணீரைத் தாக்கும். தண்ணீரின் குளிர்ச்சி சூரியனைத் தாக்குவதில்லை. இது தான் கதையின் தத்துவம்.

உலகை வளைத்துக் கிடந்த இருட் குவியலினூடே கருமித்தனமாய் ஒளி பரப்பிய விண்ணொளிப் பொட்டுகளையும் ஒழிக்கவென்று ஒரு கும்பல் மேகம் பாய்ந்தோடி வந்தது.

மழையின் வரவிற்கான கட்டியத்தை கடல் கூறிற்று. சிறிய அலைகள், அந்தக் கப்பலை தொட்டில் ஆட்டுவதுபோல் ஆட்டாமல், பந்தாடுவதுபோல் தூக்கித் தூக்கி எறிந்தன. கங்குலின் கோரமும் கனத்திருந்தது.

அது, சோழநாட்டுக் கப்பல். சோழ இளவரசன் விக்கிரமன் கடல்தாண்டிப் பயணம் செய்துவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்தான். தாய் நாட்டைக் காணும் தாகத்தால் பீடிக்கப்பட்டவனாக மரக்கலம் இயக்குபவரைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஆனால் இடையில் குறுக்கிட்ட அந்தப் பாழும் இரவில்......நடு நிசியில் அலைகள் பொங்கின.

மின்னல்களும் இடிகளும் போட்டியிட்டு அறற்றின. காற்றுச் சுழலின் பெருங் கோபம் கடலைக் கடைந்தது. எழுந்த அலைகள் அலைகளா

யில்லாது மலைகளாகி பேயொலியிட்டு உருண்டன. அலையின் உச்சிக்கு ஏறிய நாவாய் அப்பால் எறியப் பட்டு தலைக்குப்புறக் கவிழ்ந் தது.

மொத்தமாய் ஒன்று கல ந்து வந்த உயிர்கள், கிறப் பட்ட தலையணையின் பஞ்சு கள் காற்றில் பறப்பதுபோல் தனியே பிரிந்து, நெடுங்கட லின் குழப்பப்பரப்பில் அலைந் தன.

இருட்டு சிரித்தது,பயங்கர மாக. இரத்த நிற ஒளியுடன் கடலடியினின்று புறப்பட்ட அறுந்த நிலா அழுது வடிந் தது.

இலட்சத் தீவுக் கூட்டம் என்று இக்காலத்தில் அழைக்கப்படும் பகுதியில் ஒரு சிறு தீவுத்துணுக்கு. அதில் தென்னைமரங்கள் கண்களெட்டுமட்டும் நிறை ந்து கிடந்தன. தீவின் மத் தியபகுதியில் பச்சைப்பசே லென்ற ஒரு குன்று, மற்றப் படி இரண்டொரு காட்டு வாசிகள் வாழும் கிராமம்.

இங்கு வாழும் மக்கள் காட்டுமிராண்டிகள். தீவைச் சுற்றியுள்ள கடலில் மீன் பிடிப்பதும், காட்டிலுள்ள காய்கனிகளைப் பறித்தும் உண்பதுமாக வாழ்பவர்கள். காலை நேரம் அழகாக மலர்ந் தது. புறப்பட்ட செவ்வொ ளிக் கதிரவன், அடைந் திருந்த இருளைக் கொன்று வானில் கம்பீர நடைபோட் டான். கடமையைக் கருத் தாய்ச் செய்ய சிலிர்த்தெழு ந்த பறவைக் கூட்டம் இன் னொலி யிட்டது.

அந்த இனிய வேளையில் கடலோரத்து மணற்பரப்பில் ஒரு பெண் நின்றிருந்தாள். அவளுக்கு பதினெட்டு வயதிருக்கும். பக்குவமான பருவமுடையவள். உறுதி யான உடற் கட்டும், உத் ஸாகமான முகப்பொலிவும் உடையவள். செம்பொன் நிறத்து தலைமயிர் காடென வளர்ந்து ஒழுக்கமில்லாமல் காற்றில் அலைமோதிக் கொண்டிருந்தது. மரஇலை களை மானத்தைக் காக்கும் உடையாக அணிந்திருந்தாள் அந்த மங்கை நல்லாள்.

கடற்பரப்பின் நெடுந் தொலைவு வரை சென்று திரும்பிய அவள் கயல் விழிகள், நீரில் விழுந்தெழும் பெனத் தத்தளிக்கும் இள வரசன் விக்கிரமனை ஊடுரு வின. இனம்புரியாத ஒல மொன்று அவள் அடிவயிற்

றினின்று பீறிப் புறப்பட்டு தீவில் பரவியது. பின்னு லிருந்த தென்னந் தோப்பில் தேங்காய் பறிக்கும் வேலையி லீடுபட்டிருந்த சில காட்டு வாசிகள் திமுதிமுவென்று ஓடிவந்தனர்.

திடீரென்று கடலில் பாய்ந்த ஒருவன், அரைஉயி ருடனிருந்த விக்ரமனை தூக்கிவந்தான். காலை இளங் காற்று பூவில் தழுவி மணங் கொண்டு பரவியது.

கடலொலி ஓய்வென்பதில் லாது, ஒழிவென்பதறியாது முழங்கிக் கொண்டிருந்தது. இளவரசன் விக்ரமன் அங் கங்கள் கழன்று விடுவது போல் வலித்தமையால் தன் உடலை நெளிய விட்டான். நீலவானின் ஒருபகுதி அவன் கண்ணில் பட்டது. ஆம்; அப்போதுதானே அவன் சுய உணர்வடைந் தான்.

கப்பல்,கடல், புயல், அலை, காற்று, இருட்டு.

நெஞ்சு தன் அடியில் கிட ந்த நினைவுக் கற்றைகளை உருவியெடுத்து ஆராய்ந் தது. இந்த மணல் ஏது? கடல் நீர் எங்கே போயிற்று?


P. ஹாசேன்ஷா & சன்ஸ்

(பூரண உரிமையாளர்)

P. H. முகமது

நஸீருத்தீன்

டால்மியா சிமென்ட் ஸ்டாக்கிஸ்ட்.

G I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.

பாலக்கரை ரோடு திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE


சுற்றிப்பார்வையை ஓட்டி னான்.

உடலில் போதுமான ஆடையேதுமில்லாமல் குரூப மான முகம்கொண்டு தடித்த உருவங்களாக நிற்கும் இவர்கள் யார்?

ஒன்றும் புலப்படவில்லை விக்ரமனுக்கு.

"யார்?"

"தாக்ரே கிக்ரே"

"என்ன சொல்கிறீர்கள்?

"தளார் குர் காக்குர் சளா ளா".

விக்ரமன் 'பக்' கென்று சிரித்தான். இதென்ன

தாக்ரே கீக்ரே பாஷை? அந்தத் தீவுக்கு அவன்வந்து நான்கு மணி நேரமாகி விட்டது. தீவுவாசிகள்பேசும் மொழி அவனுக்குப் புரிய வில்லை. திணறினன்.

சீக்கிரமே, அவனுக்கு நிலைமை ஒருவாறு புரியலாயிற்று. ஏதோ ஒரு அநாமதேயத் தீவில் தான் வந்து ஒதுங்கியிருப்பதாக உணர்ந்து கொண்டான்.

தீவு வாசிகள் அவன்மேல் அன்பு காட்டினர். சாகக் கிடந்த அவனை அமுதம் போன்ற பச்சிலைச் சாற்றினுல் உயிர் கொடுத்துப் பிழைக்க வைத்தனர்.

விக்ரமனுக்கு தீராத ஏக்கம். தமிழ்நாட்டின் எல்லையை மிதிக்கும் இறுதி நேரத்தில் 'இது என்ன இடைச்சங்கடம்? இனி எப்படி நாடு திரும்புவது?''

கவலையுடன் எழுந்து கடற்கரை மணலில் உலவினன்.

வெயில் வேளையில் குளுகுளு வென்று வீசிய காற்றினுல் உடல் இதமடைந்தது. தீவின் நடுவில் நின்ற குன்றின் கம்பீரமும், அழகும் மனதிற்குப் பரவசம் தந்தது: சோர்வடைந்திருந்த விக்ரமன் சிலிர்த்துக் கொண்டான்.

எது வந்தாலும் தாங்கும் ஆண்மையும், கம்பீரமும் தன் உடலில் உள்ளவரை இது போன்ற ஆயிரம் துன்பங்களை வரவேற்க அவன் தயார். ஆனல் தன் நாடு திரும்பும் ஏக்கத்தினுல் பீடிக்கப்பட்ட அவன், இந்தத் துன்பத்தைப் பெரிதாகவே. எண்ணினன். எத்தனை நாளைக்கு இந்தத் தீவுவாசமோ?

காலடியோசை கேட்டு திரும்பினன். தீவுவாசி ஒருவன் வருவது தெரிந்தது.

நடுப்பகல் வேலையில் அந்தத் தீவின் தலைவனின் வீடு என்று சொல்லப்படும் ஓர் உயர்ந்த குடிலில் விக்ரமனுக்கு விருந்து நடந்தது. மாலைவேலையில் மறுபடி தீவைச் சுற்றிவந்தான் அவன். குன்றின் உச்சிவரை கூட ஏறினன்.

உயர்ந்த ஒரு பாறையோரமாக வந்து நின்ருன். ஒரு காட்டுமிராண்டிப் பெண், பின்னுல் வந்து நின்றதை அவன் கவனிக்கவில்லை.

ஒரு காலை பாறை மீது தூக்கிவைத்து உடலைச் சாய்த்து நின்ற அவனது

மன்மதத்தோற்றம், கன்னிப் பெண்ணான அவள்மனத்தில் காதலைக் கிளறிவிட்டது, வாழ்நாளில் என்றும் அநுபவித்தறியாத அவ்வுணர்வு அவள் உடலை நடுங்கவைத்தது. எல்லையில்லாத இன்பத்திலே இணைந்த மனம், உணர்வுகளினால் திணறியது. எங்கோ சூனியத்தில் வெறிச்சோடியிருந்த அந்த அழகனின் பார்வை, தன் மேல் விழாதா என்று ஏங்கிய அந்தப் பெண்மணி, இலேசாகக் கனைத்தாள்.

திடுக்கிட்டுத் திரும்பினான் அவன்.

காட்டுமிராண்டிப் பெண்ணின் தோற்றத்தைக் கண்டு சட்டென ஒதுங்கினான்.

யார் இவள்? தலைவனின் மகளா? இவள் முகமும் உடலும்! சே! இப்படியும் ஒரு பெண்ணா? நளினமும் எழிலும் பொங்கவேண்டிய ஒரு பருவத்து மாதின் தோற்றமா இது?

திரும்பிய வேகம் அவளைத் திடுக்கிட வைத்தது. வீரனாக திரும்பிய அவன துபடபடப்பு அவள் உள்ளத்தைமேலும் கிளறிவிட்டது. அவன் சட்டென ஒதுங்கியதைக் கண்ட அவள் கூசினாள். அவன் அருகில் போகக்கூடாதா? 'ஏன்?'

கள்ளமில்லாத அவள் உள்ளத்தின் மூடியை விசையாய் தள்ளிய பருவ உணர்வு அலைந்து அவளை அலைக்கழித்தது.

பேச அவள் ஆவலுற்றாள், பேச்சு கொடூரமாயிற்று.

" தாமர்லே கார்கட்ரே ?

"என்னம்மா சொல்கிறீர்கள்"

அவளுக்குத் தெரியவில்லை. அவனுடன் எப்படிப் பேச வேண்டுமென்றுபுரியவில்லை. ஊமையாக அவள் திணறினாள். தன் அன்பை, தன் பிரேமையை, தன் காதலை எந்த வார்த்தைகளால் வடித்தெடுத்து அவள் அவனுக்குச் சொல்வாள்? பேசவாயிருந்தும் பேசவழியில்லாத அப்பேதை தவித்தாள்.

இப்படி அவர்கள் திணறிக் கொண்டிருந்த வேளையில் அவளுடைய தந்தை,அந்தத் தீவின் தலைவன், அங்கு வந்து சேர்ந்தான். கண்ணீர் விடஇருந்த பேதை, சோகத்

தை மறைத்து, தந்தையைப் பார்த்துச்சிரித்தாள்."

மறுநாள். காலைக் கதிரவன் புதுவொளி பரப்பினன் தீவின்மீது. பரண் ஒன்றின் மீது தூங்கிய விக்ரமன் சுவீரென்ற சுடும்வெயில் வரும் வரையில் கனவுகள் கண்டு கொண்டிருந்தான். பருவத்துக் கனவுகள்.

அவனுடைய பெருந்தேவி அவனுக்காக மணமாலையுடன் காத்துக்கொண்டிருப்பாள் சோழநாட்டில்.

குளிர் காற்று வீசிடும் இரவின் இறுதியிலே கண் விழித்துவிட்ட அந்தக் காட்டுத் தலைவனும், அவன் மகளும் கடற்கரைக்கு ஏகினர்.

அது வாழ்விலே ஒருநாள், அவளது திருநாள். இதை அவள் மனம் அடிக்கடி ஏனோ சொல்லிச் சொல்லிக் காட்டியது?

தந்தையை மீன்களுக்கு எமனாக கடலுக்குள் அனுப்பினாள் அவள்.

வெயில் உச்சிக்கு ஏறும் போழ்தில் தந்தை திரும்பி விட்டதைக்கண்டு அதிர்ச்சி

யடைந்தாள். எப்போதும் மாலையிலல்லவா வருவார்?

"ஏன் அப்பா, அதற்குள் வந்துவிட்டீர்கள்?"—தங்கள் மொழியிலேயே தான் பேசினாள்.

"இன்றைக்கு அந்தப் பையனை அவனது நாட்டுக்கு அனுப்பவேண்டுமே?"

'ஐயோ! போய் விடுவாரா அவர்?'

'ஆமாம்!'

"இன்றைக்கே போகப் போகிறாரா?"

"இல்லையம்மா, இன்றைக்கு படகு கட்ட ஆரம்பிக்கவேண்டும். நாளை விடியும் பொழுதில் கிளம்பிவிடுவான். ஏனம்மா?

பதில் சொல்லவில்லை. அவள் வாயை சோகம் அடைத்துவிட்டது.

"நல்ல வேளையாக நம் தீவில் ஒதுங்கினானே! மேற்குத் தீவிலோ, தெற்குத் தீவிலோ ஒதுங்கியிருந்தால் மனித வாடையையே காணாமல் செத்திருப்பான்!"

அவளுக்கு இது செவியில் படவில்லை. அவள் மனம் எங்கோ சென்றிருந்தது.

"என்னம்மா சிலையாக நின்றுவிட்டாய்?...நம் ஆட்களிடம் சொல்லி கனமான படகு ஒன்று கட்ட ஏற்பாடு செய்யப் போகிறேன்"

தலையை ஆட்டினாள்.

மாலை வேளை. அந்த ஆண் முகனைத் தரிசிக்க கண்கள் ஆவலுற்றன. நாளை போய் விடுவாரே? ஆசை பொங்கும் அந்த அழகு ரூபத்தில் என்னதான் தெய்வீகம் இருக்கிறதோ! அவள் மயங்கினாள்.

தன்னைக் கண்டவுடன் அவனுடைய அழகுவதனம் ஏன் சுருங்கவேண்டும்? ஓர்வித அருவருப்பை அவன்முகம் ஏன் காட்டவேண்டும்? அசூசையான ஏதோ ஒன்றை மிதித்தவன் போல் அவன் ஏன் விலகவேண்டும்? ஓடவேண்டும்? அவள் கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை.

இளவரசன் மனதில் அருவருப்பு உண்டாகியது. இப்படியும் ஒரு கோர உருவம் இவ்வுலகில் இருக்கிறதே என்பதுதான் அது.

"அப்பா! அவருடன் என்னையும் அனுப்புங்கள்! நானும்

போகிறேன்!" என்ருள் அவள்.

மகளது பேச்சைக்கேட்டு திடுக்கிட்ட அவர் ஒன்றும்


# Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator &Contractor,
(Regd. No. 5.)

A.C.C. CEMENT STOCKIST

## 2, Sankari Road, Trichengode,

(Salem Dt.)
(சென்னை அரசினர் உதவிபெற்றது

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பணவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.


புரியாமல் "எவருடன் அம்மா?" என்ருர். இதற்குப் பதில், அவர் எதிர்பார்த்தது தான் வந்தது.

சீறியெழுந்தார் "சீ! நாயே! போ வீட்டிற்கு! போய் உறங்கு!" அதற்குமேல் வாதாட அவளுக்கு சக்தியில்லை. பொங்கிய அழுகையைஅழுத்தத்துடன் உட்தள்ளி, குடிலுக்கு நடந்தாள்.

'நாளைக் காலை அவரைக் காணமுடியாது!—இந்த எண்ணம் அவளைச் சித்திரவதை செய்தது. தூக்கம் பிடிக்க வில்லை.

அவள் காட்டுமிராண்டி தான். நாகரிகமில்லாதபிறவி தான். பலருடன் பழகியறியாத பேதைதான். என்ருலும் அவள் பெண். பெண்ணுக்கு இளம்பருவத்தில் உண்டாகும் உணர்ச்சிகள் அவளுக்கு மட்டும் உண்டாகாதா?...அவனைத் தவிர அவ்வளவு அழகான வன் வேறு யாரையும் அவள் பார்த்தது கிடையாது. அவனை அடைந்தால்தான் இனிவாழ்வு என்ற வெறி யுண்டாயிற்று.

ஆனல் அவன்? எங்கோ இருக்கிருன், எங்கோ போய் விடுவான்!

பூமியில் கிடக்கும் ஏதோ மகா அதிசயமான பொருளைத் தேடுவதுபோல் கடுகளவிற்கு இருந்த தாரகைப் பொடிகள் ஒளியுமிழ்ந்து—பார்த்தன. ஆனால் இந்த இருட்டுலகம் அதன் அற்ப ஒளிக்கு மசியவில்லையாதலால், அவை வெட்கமடைந்து, விரைந்து கொண்டிருந்த மேக மங்கைகளினூடே தேய்ந்து நசிந்தன.

கடல் தன் காதலி பூமியை முத்தம் கொடுக்கும் பொருட்டு ஒவ்வொரு தரமும் கையை விரித்துக்கொண்டு பாய்ந்தது. கண்மண்தெரியாத வெறிபிடித்த இருட்டில் சகலமும் சமாப்தியாக, உலகம் ஒன்றுமில்லாத வெறும் சூன்யமாய் கிடந்தது.

அந்த வேளையில் கடலோரமாக ஒரு பெரியபடகு தயாராக நின்றது. அருகே தீவுத் தலைவனின் மகள் பேயென்று பார்ப்பவர் அஞ்சும் நிலையில் வந்து நின்றாள். "இந்தப் படகுதான் நாளை அவரையும் என்னையும் பிரிக்கப்போகிறது. இதை உடைத்துவிட்டால்—இலேசாகக் கிறிவிட்டாலும் போதும். வேறுபடகுசெய்ய நாளை முழுவதும் உழைத்தாகவேண்டும். அதற்குள் என் மனதின் ஆசைகளை அவரிடம் சொல்லிவிடலாம்."

இவ்வாறு எண்ணினாள். எண்ணிய விதமே படகிலே கீறல் உண்டாக்கினாள்.

ஆனால் விதியின் எண்ணம் வேறு!

வீடுவந்து சேர்ந்தாள் அவள். விக்கிரமன் உயர்ந்த பரண்மேல் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். கண்ணீரில் ஊறிய கண்களைத் துடைத்துக்கொண்டு அவனது உறங்கும் உடலைப் பார்த்தாள் அவள்.

அவன் கூவினான். "பெருந்தேவி! பெருந்தேவி!"

அது அவளுக்குப் புரியவில்லை. பெருந்தேவி என்பது ஒரு பெண்ணின் பெயர் என்பதோ, அந்தப் பெண்ணின் அழகில் புவனமே மயங்கும் என்பதோ அவளுக்குத் தெரியாது. பாவம் பேதை! சந்திரனை உண்ண வேண்டும் என்று அடம் பிடித்த குழந்தையின் நிலையில் எட்டாமல் கிடக்கும் அவனை அடைய ஆவலுறுகிறாள்.

மறுநாள். சுளீ ரென்று உடலில் சூரியனின் பாணங்கள் பாயும் போதே அவள் எழுந்தாள். இன்னேரம் படகைப்பார்த்து ஏமாந்து விட்டு வேறுபடகு செய்வதற்காக மரம் எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணினாள்.

கடற்கரையை வந்தடைந்தாள். படகைக் காணவில்லை, அவளது அவனையும்—

காணவில்லை.

அவள்... அவள்...

இன்றும் அந்தத் தீவின் குன்றில் பைத்தியக்காரியாக நிற்கிறாள். அவள் பார்வை கடற்பரப்பில் பாய்ந்திருக்கிறது. சிந்தனை அந்த வீரனின் அழகிய தன்மையைப் பற்றியதாயிருக்கிறது. இந்த இருட்டடைந்த உலகின் எங்கோ ஒரு காற்றில்லா மூலையில் எறும்பாகத் தத்தளிக்கும் அவள் உச்சரிக்கும் காதல்மொழிகள் காற்றில் கலந்து கரைகின்றன!


Phone : 31738 Grams : MARIGOLD.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ராப்பர் 4-வது பக்கம் | (மூன்று கலர்) | 150—0—0 |
| ,, ,, | (இரண்டு கலர்) | 85—0—0 |
| ராப்பர்உள் பக்கம் ஒரு கலர் | | 50—0—0 |
| சாதாரண முழு பக்கம் | | 40—0—0 |
| ,, ½ பக்கம் | | 25—0—0 |
| ,, ¼ பக்கம் | | 15—0—0 |

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு
அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,
"தொழில்"
55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

# மனிதருள் மாணிக்கம்

சோ. கருணநிதி

அறுபது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் சாமினுத சர்மாவுக்கு எப்படித்தான் திரும்பியதோ அந்த வாலிப முறுக்கு! இருபது வயது வாலிபன் இதழ்களில் நெளிந்தோடும் புன் முறுவலைப் போன்று தன் அதரங்களை வளைத்து குவித்தபடி, அந்த வாலிபனின் புகைப் படத்தைப் பார்த்து சிரித்தார். அப்பொழுது தான் அவருக்கு காப்பி கொண்டுவந்த விமலா, அவரையும் அந்தப் புகைப்படத்தையும் பார்த்துவிட்டு வெட்கத்தால் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

தம் அருகில் விமலாகாப்பியுடன் நிற்பதைப் பார்த்து சந்தோஷ மிகுதியால் "விமலா!" என்ருர் "ஏனப்பா!" என்று கேட்டாள் அவள். அப்போது முகத்தில் விளையாடிய நாணம் அவள் அழகை மிகைப் படுத்தியது.

"பையனை உனக்குப் பிடித்திருக்கிறதாம்மா!" என்ருர் விமலாவை அண்ணாந்து பார்த்த படியே!

"போங்களப்பா!" என்று மட்டும் சொல்லிவிட்டு சர்மாவின் மறு வார்த்தையைக் கூட கேட்காமல் உள்ளே போய் விட்டாள் விமலா!

சர்மா தனக்குத்தானே சிரித்துக் கொண்டார். அந்தச் சிரிப்பில் தெறித்தோடிய பொருளாழந்தான் எத்தனை!

கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதம் செய்துவிட்டு கடைசியில் என்ன காரணத்தாலோ, தமது முப்பத்து மூன்ருவது வயதில் காமாட்சியைக் கைப் பிடித்தார்.

வரதட்சணை குறுக்கிட்டு கல்யாண முயற்சியைக்குலைத்து விட்டது. எழுத்தாளனுன ஆனந்தன் தடையைத் தகர்த்து கல்யாணத்தை முடித்துக்கொண்டு மறுவேலை பார்த்தான்.

காமாட்சியின் பதிபக்தி சர்மாவை ஆச்சரியப்படச் செய்தது. "இப்பேர்ப்பட்ட குணசாலியான நீ மனைவியாய்க் கிடைப்பாய் என்று தெரிந்திருந்தால், எப்போதோ, நான் கல்யாணம் செய்து கொண்டிருப்பேனே!" என்று அவளிடமே சொல்லி பெருமைப்படும்போது அந்தப் பெருமையில் தன்னையே மறந்து விடுவாள் காமாட்சி. இப்படிப்பட்ட அரிய, அற்புத தம்பதிகளிடையே ஒரே ஒரு குறையை மட்டும் வைத்து விட்டார் கடவுள். புத்திரபாக்கியம் இல்லாத அந்தக் குறை காமாட்சி அம்மாளை வெகுவாக வாட்டியது. பெண்ணாய்ப் பிறந்தால் தாய்மைப் பேறில்லாத வாழ்வு ஒரு வாழ்வா? இதை நினைத்து காமாட்சி ஏங்கும்போதெல்லாம் சர்மா அவளுக்குச் சமாதானம் செய்வார். அவருடைய நொண்டிச் சமாதானத்தை தாய்மைப் பேற்றைப் பெறத்துடிக்கும் காமாட்சியின் இதயம் ஏற்க மறுத்துவிடும்.

நீண்டகால இறைவனின் சோதனைக்குப் பின், கடவுள் காமாட்சியின் வயிற்றில் பால் வார்த்தார். மூக்கும் விழியுமாக அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது. காலங்கடந்து பிறந்த குழந்தையல்லவா, அந்த பச்சிளம் குழந்தை பெற்றோர்க்கு பேரின்ப சாதனமாய் விளங்கியது. குழந்தைக்கு விமலா என்று பெயரிட்டனர்.

இன்பமும் துன்பமும் யாரிடமும் நிலைத்து நிற்காது போலும். விமலா பிறந்த இரண்டாண்டுகள் வரை துன்பத்தையே அறியாத சர்மாவின் இதயத்தில் துன்பச் சுமையை சுமத்தி விட்டுப்போய் விட்டாள் காமாட்சி! முதல் முறையாக சர்மா அப்பொழுது தான் கண்ணீர் வடித்தார். இரண்டுவயதுக் குழந்தையான விமலாவை எப்படிக் காப்பாற்றுவது என்ற கேள்விக்குறி அவரை வேதனைக்குள்ளாக்கிய போதுதான், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரி லட்சுமி "நான் வளர்க்கிறேன் அண்ணா!" என்று ஆறுதல் கூறினாள். சர்மாவின் பெருமூச்சில் கொஞ்சம் சூடு தணிந்தது.

விமலா தன் அத்தை வீட்டிலேயே வளர்ந்து பெரியவளானாள். தமக்குக் கிடைக்கும் 80 ரூபாய் வாத்

தியார் சம்பளத்தில் அவ்வப்போது தம் மகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்துப்பார்த்துவருவார்.

ஆனல் விமலா பருவப் பெண்ணுய் சர்மாவின் வீட்டுக்கே வந்தபோதுதான், சர்மா வேலையில் இருந்து ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைநினைத்து அவர் உள்ளூர வருந்திஞலும் தாம் படும் மனவேதனை விமலாவுக்குத் தெரியக்கூடாதே என்று எண்ணி மறைத்து வைத்தார். பிறகு எப்படியோ ஒரு கம்பெனியில் கணக்கு எழுதிக்கொடுக்கும் வேலையில்போய்ச் சேர்ந்தார். குடும்பம் ஒரு மாதிரியாய் நடந்துகொண்டிருந்தது.

எதற்கோ சர்மாவைத்தேடி வந்த கணபதி அய்யர் விமலாவைப் பார்த்து விட்டு "என்னய்யா, வயதான பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு வாயை மூடிக்கொண்டு இருந்தால் எப்படி காரியம் நடக்கும்?" என்று இடித்துச் சொன்னபோது தான் சர்மாவின் நெற்றியும் சுருங்கிவிரிய ஆரம்பித்தது. அன்று முதல் தமது வரன் தேடும் படலத்தை ஆரம்பித்தார் சர்மா.

போகாத ஊரில்லை, விசாரிக்காத வீடில்லை. பார்க்காத ஜாதகமில்லை என்று சொல்லும் அளவுக்குப் படர்தபாடுபட்டு சோர்ந்து போஞர் சர்மா. தன்னுடைய நல்வாழ்வுக்காக தன் தந்தை வேதனைப் படுவதை விமலாவால் பொறுக்க முடியவில்லை.

ஒர் நாள் கணபதி அய்யர் இரண்டு தம்பதிகளுடன் வந்து சர்மாவின் வீட்டில் இறங்கிஞர். தம்முடன்கூட்டி வந்தவர்களை அறிமுகப் படுத்திஞர். இவர்தான் பையனின் தகப்பஞர் சீனிவாசன். ரிட்டையர்டு ரிஜிஸ்ட்ரார்: பையன் சென்னை பத்திரிகை காரியாலயம் ஒன்றில் வேலை பார்க்கிருன். பெயர் ஆனந்தன். நல்ல எழுத்தாளனும் கூட. "வரதட்சிணை" என்று அவன் எழுதிய கதை, சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு அடைந்தது என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தார் கணபதி அய்யர். முறைப்படி அன்றுமாலையே பேச்சுவார்த்தைகள் நடந்தன. "பெண்ணை எங்களுக்குப் பிடித்துவிட்டது. ஊருக்

2/21, Pilliar Koil Street,

MADRAS-3

குப் போய் விபரம் எழுதுகிறோம்!" என்று சொல்லிவிட்டு கணபதி அய்யருடனும், தம் மனைவியுடனும் சீனிவாசன் வண்டியேறினார். புறப்படும்போது பையனின் புகைப்படத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றார். சர்மாவின் இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. விமலாவோ தனக்கு ஓர் எழுத்தாளன் கணவனாக கிடைக்கப் போவதை எண்ணி மகிழ்ந்தாள்.

இன்று காலையும் அந்த மகிழ்ச்சியில் தான் சர்மா தம்மை அறியாமல் சிரித்தார். கோடை இளந்தென்றல் சிலுசிலு வென்று வீசியது. கொட்டாவி விட்டுக்கொண்டே மெல்ல சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் சர்மா.

* * * *

திருமணம் முடிந்தது! பையனும் பெண்ணும் மாப்பிள்ளை வீட்டுக்குப் போக வேண்டிய நாள்.

"இம்! புறப்படம்மா! நேரமாகி விட்டது!" என்று அவசரப்படுத்தினாள் தாயார். விமலாவும் ஆனந்தனும் சர்மாவை அணுகி அவரை வணங்கினர். சர்மா விபூதியை எடுத்துப் பூசும்போது விமலாவின் கண்கள் கலங்கி இருப்பதைக் கண்டார். அப்போதுதான் அவருக்கும் தம் மகளைப் பிரியப்போகிறோம் என்ற வேதனை வாட்டியது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு வாழ்த்தினார். வண்டி நகர்ந்தது. சர்மா வாய்விட்டேகத்தி விட்டார். "விமலா உன்னை விட்டுப் பிரிந்து எப்படியம்மா இருப்பேன் நான் மட்டும்" என்று. "அப்பா! என்னப்பா இது,

பட்டப்பகலில் புலம்புகிறீர்கள்!" என்று தட்டி எழுப்பினாள் விமலா! சர்மா கண்ணை விழித்துப் பார்த்தார். அப்பொழுதுதான் தெரிந்தது தாம் கண்டதெல்லாம் வெறும் கனவு என்று! இதற்குள் விமலா தபாலில் வந்த கடிதம் ஒன்றை அவரிடம் நீட்டினாள். அவசர அவசரமாய் கடிதத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார் சர்மா!

அன்புடையீர்!

க்ஷேமம்! க்ஷேமத்துக்குப் பதில். பெண்ணை பையனுக்குப் பிடித்துவிட்டது. ஆனால் இதர விஷயங்கள் திருப்தி இல்லாமல் இருப்பதால் கொஞ்சம் யோசிக்க வேண்டி இருக்கிறது. தங்கள் பெண்ணுக்கு வேறு பொருத்தமான இடங்களைப் பார்த்துக் கொள்ளவும். மன்னிக்கவும்.

தங்கள்,
சீனிவாச சர்மா

சர்மாவின் உடம்பு துடித்தது. "பாவிகள்! என்னை ஏமாற்றிவிட்டார்கள். மாப்பிள்ளை எழுத்தாளனும், அப்பன்தான் பணத்தாசை பிடித்தவன் என்றால் அந்த எழுத்தாளனுக்கு எங்கே போச்சு புத்தி! எழுத்தாளனும் எழுத்தாளன். வரதட்சிணையைப் பற்றி வேறே பிரமாதமாய் எழுதிவிட்டானமே! இப்போது தன்னுடைய வாழ்க்கையில் மட்டும் அதைக் கடைப்பிடிக்க மறுக்கிறான். ஊரை, உலகத்தை ஏமாற்றத்தானா எழுத்தாளன் வேஷம் என்று ஆத்திரமிகுதியால் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிக் கொண்டிருந்தார் சர்மா!

"நடக்கிறது நடக்கட்டும். நீங்கள் அமைதியாய் இருங்கள்!" என்று சமாதானம் செய்தாள் விமலா! இந்தச் சமயத்தில் வாசலில் ஏதோ வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்கவே விமலா எட்டிப் பார்த்தாள். வண்டியிலிருந்து சீனிவாச சர்மாவும் அவர் மனைவியும் இறங்கி வந்தனர். பின்னால் வருவது யார்? விமலாவின் கண்கள் அந்த அழகிய வாலிபனை வட்டமிட்டது? அவனும் அவளைப் பார்த்துவிட்டான். வெட்கத்தால் உந்தப்பட்ட விமலா புடவைத் தலைப்பை எடுத்து உடம்பைப் போர்த்திக்கொண்டு உள்ளே போய் விட்டாள்.

கண்களைத் திறந்தபடி இந்த வேலையைச் செய்யுங்கள் பார்க்கலாம்.

---

வந்தவரை வரவேற்று உட்காரவைத்தார் சாமிநாத சர்மா! சீனிவாசன், வந்ததும் பேச ஆரம்பித்தார். "தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்! உங்கள் மனம் நோகும்படி எழுதிவிட்டேன். பையன் தான் என் கண்களைத் திறந்துவிட்டான். கேவலம் பணத்துக்காக ஒரு பெண்ணை வஞ்சித்து இன்னொருத்தியை மணக்கமாட்டேன் என்று ஒரே அடியாய் கூறிவிட்டான். இன்றே தங்கள் பெண்ணை முடித்துவிடும்படியும் சொல்லி விட்டான்!" ஒரே மூச்சில் சொல்லி முடித்தார்.

சர்மாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. திடீரென்று எழுந்து, தலையைக் கவிழ்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஆனந்தனைக் கட்டி அணைத்துக்கொண்டார். 'மாப்பிள்ளை! நீங்கள் மனிதருள் மாணிக்கம்! எழுதியபடியே நடந்தும் காட்டிவிட்டீர்கள்! இப்படிப்பட்டவர்கள் தாம் நம் சமூகத்துக்குத் தேவை!' "என்றார் உணர்ச்சி வசப்பட்டு. ஆனந்தன் முறுவலித்தவாறே கண்களை எங்கோ சுழல விட்டான். அறைச் சன்னலில் இரண்டு கண்கள் நீரைப் பொழிந்துகொண்டிருந்ததை அவன் கண்கள் கண்டுவிட்டன! நிச்சயமாக அது ஆனந்தக் கண்ணீராய்த்தான் இருக்கவேண்டும்! ஆமாம்! விமலா தனக்கு மனைவியாகி விட்ட பிறகு ஒருநாள் இதைப் பற்றி அவளிடம் கேட்க மறந்து விடவில்லை. கணவனின் நினைவு சக்தியை வியந்தவாறு தலையசைத்தாள் விமலா.

# கடமை

கொள்ளைக்காரர்கள் திடீரென்று பிரயாணி ரயில் வண்டிகளை கவிழ்க்க சதி செய்தனர். ஹௌரா பிரிட்ஜிற்கு அருகே உள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் எல்லாம் ரயிலில் பிரயாணம் செய்ய திட்டமிடுமுன் மக்கள் பலவாறு சிந்தித்தனர். ஓடும் ரயிலை கவிழ்த்தோ, அல்லது

ஓவ்: வி. விஸ்வேஸ்வரன் எம். ஏ.

ஓடும் ரயிலில் புகுந்தோ கொலை செய்து கொள்ளை செய்து போகிறுர்கள் என்பதைக் கேட்டு மக்கள் பீதியடைந்தனர். இருப்புப் பாதையிலுள்ள "பிஷ் ப்ளேட்" டுகளை அகற்றி ரயில் விபத்துக்குண்டான வழிகளை செய்தனர் கலகக்காரர்கள். இவ்வாறு மக்களின் பொருள்களை சூரையாடினர்.

பதினைன்கு வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. அந்நிகழ்ச்சியிலே பெயரும் புகழும் பெற்றவன் நிர்மல் குமார். பிறந்த பாரத பூமியில் பணியாற்றிய ரயில்வே தொழிலாளிகளில் அவனும் ஒருவன். ஹௌராவிற்கு அருகே உள்ள 'லெவல் கிராஸிங்' காவலாளி அவன். எக்ஸ்பிரஸ் வண்டிகள் ஏரோப்பிளேன்கள் மாதிரி விரைவில் தாண்டும் அந்த இடம் ஒரு சிறிய கிராமத்தில் இருந்ததால், எக்ஸ்பிரஸ் வண்டிகள் அந்த லெவல் கிராஸிங் அருகே நிற்காது. கிராம மக்களும் அவ்வளவு வேகமாக ஓடும் விஞ்ஞானத்தின் விந்தையை கண்டு வியந்தனர். அடிக்கடி அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு செல்லும் பாசஞ்சர் வண்டிகள் குறைந்தது பதினைந்து

**மகனின் கல்வியில் ஆர்வங் கொண்ட தந்தை பணம் கிட்டாமல் தவித்தபோது எதிர்பாரா உதவி அவன் எண்ணத்தை நிறைவேற்றியது. அந்த உதவி, கடமையால் கிட்டியதென்பதை நிர்மல் உணர்கிறுன். ஆ—ர்.**

நிமிடங்களாவது நிற்காமல் செல்லாது.

நிர்மல்குமார் அவனது சிறிய கூடாரத்தில் உட்கார்ந்திருப்பான். அவனுக்கு 'ஷிப்ட்' முறைப்படி வேலை. ஒருவாரம் முழுவதும் அவனுக்கு பகலில் வேலை இருக்கும். மற்ற வாரத்தில் அவனுக்கு இரவில் வேலை இருக்கும். அவன் அமர்ந்து கூடாரத்திலிருந்து கூர்ந்து கவனிப்பான் கைகாட்டியை. ரயில் ஏதேனும் வருவது தெரிந்தால் உடனே ஜரூராக தன் வேலையை கவனிக்க தொடங்குவான்.

அந்த ரயில்வே குறுக்குப் பாதை வழியாக இருபக்கங்களுக்கும் கிராம மக்கள் வண்டிகளிலும், நடந்தும் செல்வர். நிர்மல்குமார், கைகாட்டி இறங்கியதைக் கண்டதும் கதவை மூடுவான். இருபுறங்களிலும் வண்டிப் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து முதலியவற்றை உடனடியாக நிறுத்தி விடுவான். அவன் இருபுறங்களிலும் லெவல் கிராஸிங் கதவுகளை மூடிய பிறகு சிறு பக்கக் கதவுகள் மூலமாக மக்கள் ஒன்று இரண்டாக ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு செல்வர். தண்டவாளங்களை தாண்டி செல்வர் சிலர்.

அன்று நிர்மல்குமாருக்கு 'இரவு வேலை'. நிர்மல் குமார் சரியாக இரவு எட்டு மணிக்கெல்லாம் வந்து விட்டான். எண்ணை விளக்கை ஏற்றி தன் கூடாரத்தில் வைத்துக் கொண்டான். கையில் ஒரு டார்ச்லைட்டும் இருந்தது. சிறிது நேரம் அப்படியே அசந்து உறங்கி விட்டான். திடீரென சிறிது சத்தம் கேட்கவே, அந்த நடுநிசியிலே அவனுக்கு விழிப்பு கொடுத்து விட்டது. ஹௌரா எக்ஸ்பிரஸ் இன்னும் அந்த வழியே செல்வதற்கு பத்து நிமிஷங்களே இருந்தது. விளக்கை கையில் எடுத்துக்கொண்டான். நிர்மல் விரைந்தான் சத்தம் வந்த இடத்தை நோக்கி. அங்கு ஒருவரையும் அவன் காணவில்லை. ஆனால் ஏதோ விஷமம் செய்து விட்டு சென்றிருக்கின்றனர் கொள்ளைக்காரர்கள் 'என்று நினைத்தான். அவனுக்கு அவர்களைத் தேடி அலைய அப்பொழுது நேரம் இல்லை. அதோ! அங்கு ஹௌரா எக்ஸ்பிரஸ் தூரத்தில் வருவதை கண்ணுற்றான். கைகாட்டி இறங்கியதும், அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

முக்கியமாக "பிஷ் ப்ளேட்டுகளெல்லாம் சரியாக இருக்கின்றனவா இருப்புப்பாதையிலே என கவனித்தான். இரண்டு அடி நடந்திருப்பான். ஆம்! அவைகள் அகற்றப்பட்டு இருந்தன. ஆயிரம் ஆயிரம் மக்களை சுமந்து அந்த வழியே வந்து கொண்டிருக்கும் ஹௌரா எக்ஸ்பிரஸ்ஸிற்கு விபத்து ஏற்பட்டால்......அவன் தலை கிறு கிறுத்தது. அவன் மேலும் சிந்திக்க நேரம் இல்லை. எக்ஸ்பிரஸ் அவனது கூடாரத்தையும் நெருங்கிவிட்டது. கூடாரத்திலிருந்து கூப்பிடும் தூரத்தில் இருந்தான். எனினும் சிறிது நேரம் அவன் கவனிக்காமல் இருந்தால் அந்த எக்ஸ்பிரஸ் வண்டி கவிழ்ந்து விடும் என்பதை அறிந்தான். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் உயிர் அவன் கையில் இருந்தது. அப்பொழுது கையில் சுருட்டி வைத்திருந்த சிகப்பு துணியை எடுத்தான். அந்த ஒளி மிகுந்த டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் அந்தத்துணியைப்பிடித்தான். பலதடவைகள் மேலும் கீழும் அந்த துணியை அசைத்தான். அவன் கடமையை செய்தான். அவன் ஒரு அறிவாளி.




எக்ஸ்பிரஸ் வண்டி திடீரென்று நின்று விட்டது. நிர்மல் குமாரின் சிகப்பு துணி எக்ஸ்பிரஸ் வண்டி ஓட்டுபவனின் கண்களுக்கு புலப்பட்டுவிட்டது. விபத்தும், தவிர்க்கப்பட்டது.

கடமையை செய்த நிர்மல் குமாருக்கு அவனது உழைப்பு அவன் ஏழ்மையை அகற்றவில்லை. வறுமையில் வாடினான். நிர்மலுக்கு ஒரே ஒரு மகன். அவன் அன்பு மகன் அரவிந்தை பள்ளியில் படிக்கவைத்தான். மற்ற குழந்தைகளை அவன் படிக்கவைக்கவில்லை. பெண் குழந்தைகளை படிக்கவைக்க

அவனுக்குப் போதிய ஊதியம்கிடைத்தால்தானே. அவனும் அவன் மனைவியும் ஒரு வேளை சாப்பாட்டையும் ஏன் குறைக்கவேண்டும்? அருமை மகன் அரவிந்தை கல்லூரி படிப்பும் கற்கவைத்து மகனுக்கு பெரிய வேலை கிடைக்க வேண்டுமென்பது அவர்கள் ஆசை. நாள் தோறும் ஆண்டவனை வேண்டினன். ஆனல் அவன் சம்பளம் ஐம்பதிலேயே நின்றது. உழைத்து உழைத்து முப்பது வருடங்களில் அவன் உடல் சோர்வடைந்தது.

அந்த நாள் அவனுக்கு பகல்வேலை, ஆதலால் வேலை முடிந்து வீடு திரும்பினன் நிர்மல். மனைவியிடம் தன் கவலைகளை வெளியிட்டான். அரவிந்தும் பள்ளிக்கூட படிப்பைமுடித்து விட்டான். அவனைக்கல்லூரியில்சேர்க்க போதியபணம் நிர்மல் குமாரிடம் அப்பொழுது இல்லை. தன் மகனை கல்லூரியில் படிக்கவைக்க வேண்டும் என்று அவன் நினைத்ததெல்லாம்கனவுதாஞ என்று மனைவியிடம் கூறி கண்ணீர் வடித்தான். அன்றிரவு முழுவதும் அவனுக்கு தூக்கமே இல்லை.

கதிரவன் உதித்தான். நிர்மல் புன்னகை பூத்தான். அவனுக்கு ஆண்டவன் அருள் கிடைத்ததுபோல ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. காலை சாப்பாடு முடித்து திண்ணையில் உட்கார்ந்திருந்தான். தபால்காரன்கொண்டு வந்த கடிதத்தைப் படித்தான். அதுஅரசாங்ககடிதம். அதை படித்ததும் அவனுக்கு மகிழ்ச்சி எல்லை கடந்தது. மனைவியையும் மகனையும், அவன் அருமை குழந்தைகளையும் அழைத்தான். அந்தக்கடிதத்தில் அவர்கள் கண்டது என்ன? பிரயாணி ரயில் வண்டி ஒன்றுக்கு நேரவிருந்த விபத்தை விழிப்புடனும் கடமை உணர்ச்சியுடனும் தவிர்த்ததற்காக அவனுடைய மகனின் கல்விக்காக நான்காண்டுகளுக்கு மாதந்தோறும் இருபது ரூபாய் வீதம் உபகார சம்பளத்தை வெகுமானமாக அளித்தனர் அரசாங்கத்தார். கல்லூரியில் சேர்ந்தான் அரவிந். நான்கு ஆண்டுகள் தொழில் கல்வி படித்தான். படித்துப் பட்டம் பெற்ற அரவிந்திற்கு இருநூறு ரூபாயில்வேலைகிடைத்தது. தந்தையின் மனம் மகிழ்ச்சி அடைந்தது. தந்தையின் கனவும் பலித்தது.

# சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்க சப் கமிட்டி

5-1-59 காலை 10 மணிக்கு தலைவர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் தலைமையில் கூடியது. பின் கண்ட சப்கமிட்டி அங்கத்தினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜனாப் P. H. நஸீருத்தீன் திருச்சி பொதுக்காரியதரிசி, A. முகம்மது இப்ராஹிம், கும்பகோணம், K. P. பரசுராம் பிள்ளை, பொள்ளாச்சி, முகம்மது இஸ்மாயில், புதுக்கோட்டை, M. பார்த்தசாரதி M. C. சென்னை, K. ராதாகிருஷ்ண முதலியார், சென்னை.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு பொருள் உற்பத்தியாளர்க்கு ஏற்பட்டுள்ள குறைப்பாடுகளை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறுவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

## தூது கோஷ்டி

6—1—59-ம் தேதி மாலை 3-மணிக்கு சங்கத் தலைவர் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் 12 பேர் அடங்கிய தூதுகோஷ்டியொன்று ஜாயிண்ட் டைரக்டர் ஸ்ரீ V. S. ராகவன் அவர்களைப் பேட்டிக்கண்டு பேப்ரிகேட்டர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை எடுத்துக்கூறியது. ஸ்ரீ ராகவன் விரைவில் தக்க பரிகாரம் செய்வதாய் உறுதியளித்தார்.

* * * *

அதன்பின் தூதுகோஷ்டி மாலை 4-மணிக்கு ஜாயிண்ட் டைரக்டர் ஸ்ரீ T. R. கிருஷ்ணசாமி அவர்களைப் பேட்டிக் கண்டது. அப்போது ஸ்டீல் ஸ்பெஷல் ஆபீசர் ஸ்ரீ சாமுவேல் அவர்களும் உடனிருந்து தூது கோஷ்டியாரின் முறையீட்டை கவனித்தார். அதிகாரிக் விரைவில் குறைகள் நீங்க ஆவனசெய்வதாய் உறுதி கூறினர்கள்.

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

114, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பல நிற இனமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரிசெய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

# டாக்டர்: குருசாமி முதலியார்

[அ. பி. சீ.]

மனிதருள் மாணிக்கங்களாய்த் தோன்றியவர்களுள் டாக்டர் குருசாமி முதலியாரும் ஒருவர். இந்திய அரசியலில் காந்தியடிகள், ஜவஹர்லால், ராஜாஜீ போன்றும், விஞ்ஞான மேதைத் தன்மையில் சர். சி. வி. ராமன், டாக்டர் K. S. கிருஷ்ணன் போன்றும், இலக்கியத்தில் சர் ராதா கிருஷ்ணன், ஆஜாத் போன்றும், வைத்தியத் துறையில் டாக்டர் குருசாமி முதலியார் தோன்றினர் என்றால் அது மிகையல்ல.

டாக்டர் குருசாமி அவர்கள் 1880ம் ஆண்டு தொழுவ வேளாள மரபிலே பிறந்தார். அவர் B. A. பட்டம் பெற்ற பிறகு மருத்துவத் தொழிலை மேற்கொள்ளுதல் பொருட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயின்று, 1909ல் பரீக்ஷையில் முதல் தரமாகத் தேறினர். 'சிப்பர்பீல்டு' (Chipper field) தங்கமெடலைப் பெற்றார். 1910ல் அவர் சென்னை மருத்துவ பணி (Madras Medical Service)யில் சேர்ந்து தொழில் நடத்த தொடங்கினர். பின், 1920ல் அவர் மருத்துவத் திலே 'டாக்டர்' (Doctorate in Medicine) பட்டம் பெற்றார் அப்போதுதான் சென்னை பல்கலைக்கழகம் இந்தப் பரீக்ஷையை ஆரம்பித்தது என்பது குறிப்பிட வேண்டிய விஷயமாகும். பிறகு அவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் 'மெட்டீரியா மெடிகா' பேராசிரியர் வேலையை ஏற்றார். அப்பதவியை ஏற்ற முதல் இந்தியர் அவர்தான். 1937ல் அவர் அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு (Retired) பெற்றார்.

வள்ளுவ பெருமானின் "நோய் நாடி நோய் முதல் நாடியது தணிக்கும். வாய்நாடி, வாய்ப்பச் செயல்" என்னும் வாக்கிற்கு இலக்கியமாக வாழ்ந்து வந்த டாக்டர் முதலியார் அவர்கள் அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றபோ

வொழிய மருத்துவத்தொழிலில் இருந்தே ஓய்வு பெற்றுக்கொள்ளவில்லை. [சென்னை 'ஜெனரல் ஆஸ்பத்திரியின் கௌரவமருத்துவராக (Hon. Physician) இருந்து வந்தார்.] ஏழை எளியவருக்கும், நோயினால் வருந்தும் மற்றவர்களுக்கும் உதவிசெய்யும்பொருட்டு மருத்துவத்தொழிலை தொடர்ந்து நடத்தி வந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களின் நோய்க் கொடுமைகளை நீக்கி வந்தார்.

டாக்டர் குருசாமி அவர்கள் நோயாளிகளிடத்தில் நடந்து கொள்ளும் விதமே தனிமையானது. மற்றவர்களுக்கு புதிராக இருக்கும். பணக்காரர், ஏழை என்ற பேதமே பார்ப்பதில்லை. நோயைப்பற்றி எல்லாம் அவர்கள் சொல்லும் 'கதைகளை' யெல்லாம் கேட்கவும் மாட்டார். அவர்களிடம் இரண்டொரு வார்த்தைகளுக்குமேல் பேசவும் மாட்டார். நோயாளியை ஒரு முறை பார்த்தவுடனேநோய் இன்னது என்று புரிந்து கொள்வார். மருந்தை சீட்டிலே எழுதி கொடுத்து விடுவார். நோயும் அவர்தம் கண்பட்ட மாத்திரத்திலே பறந்தோடிவிடும். அவரை 'கைராசிக்காரர்' என்று சொல்லலாயினர்.

ஏழை எளியவர்க்கும், தொழிலாளர்களுக்கும் உதவும் பொருட்டு அவர் அனுதினமும் அதிகாலையில் (6 மணியிலிருந்து 8 மணி வரை) பணம், காசு ஏதுமின்றி நோயாளிகளை பரிசோதித்து நோய்க்குத் தகுந்த மருந்தை எழுதிக் கொடுத்துவந்தார். யாரேனும் 'பீசு' கொடுக்க எண்ணினால் அதை அவர்கள் மேஜையின் மீது வைத்துப் போகவேண்டும். தவிர, கைநீட்டி வாங்கிக்கொள்வதில்லை. ஊசிக்கும், கத்திக்கும் அஞ்சாத அசையாத நோய்கள், அவர் கொடுக்கும் மாத்திரைக்கு மசிந்து வந்தன. யாவருக்கும் அவர் ஓர் அதிசய சித்தராகத் தோன்றினர். அவரை சிலர் டாக்டர் சாமியார் என்றும் அழைக்கலாயினர். ஆகவே, அவரை நோயாளிகள் மட்டுமன்றி வைத்தியர்களும் அணுகி ஆலோசனை கேட்கலாயினர். அவர்கட்கும் தம்மால் இயன்ற உதவியை செய்து, யோசனையும் சொல்லி வந்தார். அகில இந்திய

மருத்துவ சங்கத்தின் முதல் தலைவராக பணியாற்றினர்.

டாக்டர் முதலியார் அவர்கள் மிக எளிமையையே நாடி வாழ்ந்து வந்தார். அவர் எப்போதும் ஒரு நாலு முழ துண்டும், மெல்லிய அரைகை சொக்காவும் அணிந்து கொள்வார். டாக்டர் சாமியார் என்று அழைப்பது மிக்க பொருத்தம் என்பது போல் இருந்தார். அவர் ஆங்கிலேய மருத்துவமுறையின்றி நம் பழந்தமிழ் நாட்டு பழக்கங்களையும் வைத்திய சிகிச்சைகளையும், முறைகளையும் தம் கவனித்தில் கொண்டிருந்தார். சமயம் நேரும் போதெல்லாம் அதனை பின்பற்றி நடக்கலானுர்.

இதையறிந்த டாக்டர் தி. செ. சௌ. ராஜன் மந்திரி, (மருத்துவ இலாகா) அவர்கள் 1949-ல், டாக்டர் குருசாமியை Director of Indian Medicine ஆக நியமனம் செய்தார். இதனுல் நம் பழைய சுதேச முறைக்கும் ஆங்கில முறைக்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்ந்து நல்லவைகளை வைத்துக் கொண்டு நாடு முழுவதிற்கும் ஒரே ஒரு முறையை அனுஷ்டிக்க வழிவகுக்க நினைத்தார். இவ்வேற்பாட்டிற்கிணங்க தம்மால் முடிந்த வரை நல்லமுறையில் நடத்தி வைத்தார் டாக்டர் முதலியார். இதன் பயனுகவே இன்று லண்டன் தோட்டத்தில் பூந்தமல்லி ஹைரோட்டில் College of Indian Medicine அரசாங்கத்தினர் அனுமதியுடன் தோன்றலாயிற்று.

அவர்தம் சேவையை பெரிதும் பாராட்டி, 1956ல் சென்னை அரசாங்கம் அவருக்கு ஓர் பாராட்டுரை வழங்கிற்று. அதோடு மட்டும் நின்றுவிடாமல் அவரை மேல் சபைக்கு அங்கத்தினராக அனுப்பி வைத்தது.

சென்னை பல்கலைக்கழகமோ அதன் நூற்றுண்டு விழாவின் போது (1957ல்) அவருக்கு D. Sc. என்ற கௌரவ பட்டத்தை வழங்கிற்று.

டாக்டர் குருசாமி முருகனிடத்தில் மிகுந்த பக்தியுடையவர். இதுவே தம் தொழிலின் வெற்றிக்குக் காரணமென கருதி வந்தார். மற்றும் திருவருட் பணியிலே செலவிடத் தொடங்கினுர். பழனி கோபுரத்தையும்

சுவீகார மெடுத்தக் குழந்தைகளோடு அமெரிக்கத் தம்பதிகள்.

---

திருத்தணிகை படிக்கட்டுகளையும் முன்னின்று கட்டுவித்தார்.

அவர் 'தர்ம மிகு சென்னையிலே வாழ்ந்தவராதலின் தயாளகுணம் ரொம்பவுடையவராக இருந்தார். ஆகவே, வைத்தியத் தொழிலோடு நின்று விடாமல்வறுமையையும், அறியாமையையும் நீக்க அரும்பாடுபட்டார். சென்னையில் ஓர் பெரிய கல்வி. நிலயத்தை இயக்குவித்தார்.

ஒழுக்க சீலர்—கைதேர்ந்த மருத்துவர்—அறிவின் சிகரம்—எளிமையின் எழுச்சி—தர்ம தனவான்—தொழிலாளர் தோழன் டாக்டர் குருசாமி அவர்கள் 26—6—58 அன்று (78—வது வயதில்) இம் மண்ணுலகை நீத்தார். அவர் தம் பிரிவு தமிழ் காட்டிற்கு பெருத்த நஷ்டமாகும். தொழிலாளர்களுக்கு தொல்லைப்பயப்பதாகும். அவரின் ஆன்மா சாந்தியுற இறைவனை இறைஞ்சுவோமாக! அவர்புகழ் மங்காது விளங்குவதாக!

---

## வேலூர் வைத்தியசாலைக்கு, லண்டனில் நிதி வசூல்

வேலூரில் நடந்துவரும் கிறிஸ்தவ வைத்திய கல்லூரிக்கும், வைத்திய சாலைக்கும் நிதி திரட்டி உதவ பிரபல பியானோ பாடகியான ஐலீன் ஜாய்ஸ் லண்டன் ஆல்பர்ட் ஹாலில் 13-4-59 இசை விருந்தளிக்கிறார். ஐலீன் ஜாய்ஸ் மேற்படி வைத்தியசாலையின் வளர்ச்சியில் ஆர்வங் கொண்டு நெடுகவே உதவி புரிந்து வருகிறவராம்.

# பாஸ்டின் 20 E.

## பூச்சிக்கொல்லி எண்ணெ

**சகலவிதமான பயிர்களில் விழும் பூச்சி புழுக்களையும், மூட்டைப் பூச்சி, கொசு, கரப்பான், ஈ முதலிய விஷ கிருமிகளையும் கொல்ல சிறந்த மருந்து**

**உபயோகிக்கும் விதம் :** ஒரு அவுன்ஸ் எண்ணெயை 4-5 கேலன் தண்ணீருடன் நன்றாகக் கலந்து, பயிர்களின் மேல் நன்றாகப்படும்படி தெளிக்கவும்.

மூட்டை, கொசு, கரப்பான் ஈ இவைகளுக்கு 1 அவுன்ஸ் எண்ணெயை இரண்டு பாட்டல் அதாவது 40 அவுன்ஸ் மண்ணெண்ணெயில் கலந்து பம்பினால் அடிக்கவும்.

**எச்சரிக்கை :** இது விஷமுள்ளதாகையால் உபயோகிக்கும்போது புகை பிடிக்கக்கூடாது. உபயோகித்தபின், கை, கால்களை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ளவும். காலி டின்னை வேறு எதற்கும் உபயோகிக்கக்கூடாது. திறந்தபின் மூடியை மறுபடியும் இறுக்கி மூடி, குளிர்ச்சியான ஈரமில்லாத இடத்தில் வைக்கவும்.

தயாரிப்பாளர்கள் :

**டாட்டா பைசன் பிரைவேட் லிமிடெட், பம்பாய்.**

**விநியோகஸ்தர்கள் :**

**வி. கே. வேணுகோபால் அண்டு கம்பெனி**
**183, மவுண்ட் ரோட், சென்னை-2**

Manufactured by:

**Tata Fison Private Ltd.**
**BOMBAY**

Sole Stockist:

**V. K. Venugopal & Co.**
183, Mount Road, Madras-2.

கருத்துரை :

# அன்பு எங்கே?

ஆவதும் அழிவதும் பெண்ணாலே என்றால் அங்கே ஆணின் சக்திகள் எல்லாம் எம்மாத்திரம்? இதை அறிந்து கொள்ளமுடியாத ஆண்கள் என்னத்தான் கொட்டம் அடித்தாலும் முடிவில் வெறுத்து வந்த பெண்ணிடமே விருப்புக் கொண்டு சரணடையத்தான் செய்வார்கள். ஆமாம்! பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்! அதன் எதிரொலிதான் ஜூபிலி பிலிம்ஸாரின் "அன்பு எங்கே?"

இரண்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையும் பெற்றுவிடத்தான் தெரிந்ததே தவிர அவர்களைப் பேணி வளர்க்க தெரியவில்லையே பெற்றோர்களுக்கு. கண்டிப்பும், கட்டுப்பாடும் இல்லாத அந்தக்குடும்பம் சீர்குலைந்து நின்றது. அப்போதுதான் அமுதம் போன்று வந்தாள் அமுதா! அவள் வருகை அந்தக் குடும்பத்தின் அதிர்ஷ்டமாக மாறுகிறது. கோளாறு உள்ளவர்கள் குணமடைந்து திருந்து

இன்றனர். நல் குடும்பம் பல் கலைக் கழகமாய் மாறுகிறது.

சாதாரண இக்கதையை ஜுபிலியில் முக்கியப் பணியில் ஈடுபட்டிருக்கும் தோழர் ராஜேந்திரன் அமைத்திருக்கிறார். சரளமாய் ஓடும் இக்கதையின் வசனங்களை முரசொலி மாறன் எழுதி இருக்கிறார்: குலதெய்வத்திற்குப் பிறகு மாறனின் நல்ல கருத்தோட்டமுள்ள வசனங்களை இதில் தான் கேட்க முடிகிறது. "சிறிய காற்று புயலாக மாறுவதும் புயல் தென்றலாக மாறுவதும் வெகு சீக்கிரம்!" "காற்றை எதிர்த்துத்தான் காற்றாடி பறக்கிறது" போன்ற உவமைகள் பொருத்தமான இடத்தில் அற்புதமாக எழுதி இருக்கிறார். படத்தின் ஓட்டத்தைத் தடை செய்யும் கடபுட வசனங்கள் இல்லாமல் இருப்பது அதிசயமே! அதுவும் ராஜேந்திரன் நடித்த படத்தில்?

மூத்தவன் ராமுவின் புது நாகரிக மோகத்தைக் கண்டு புன்முறுவல் செய்து கொண்டே தன் காரியத்தை சாதிக்கும் அமுதாவர்க பண்டரிபாய் நடிக்கிறார். பாலாஜியின் படோடோபத்தையும்

ஆர். எஸ். ஆர். மூவிடோன் 'தர்ம பத்தினி'யில் ஜமுனா.



ஆடம்பரத்தையும் கண்டு கோபப்படாமல் அவர் எளிய நகை ஒன்றையே மருந்தாக கொடுப்பதில் தான் எத்தனை பொருள் ஆழம் நிறைந்து காணப்படுகிறது. அமுதாவின் பாகம் பண்டரிபாய்க்கே

---

ஹாலிவுட் ஸ்டூடியோ ஒன்றில் வேலை பார்க்கும் பெர்ட் என்பார் தன் நண்பர் ஜால் என்பவரோடு ஸ்டூடியோவுக்குப் போகிறார்.

---

உரித்தானது! எனவேதான் பண்டரிபாய் நம்மை படமுழுவதும் வந்து மெய் சிலிர்க்க வைக்கிறார்.

பண்டரிபாயின் கணவனாக பாலாஜி நடிக்கிறார். பாராட்ட முடியாத நடிப்பு என்றாலும் பழுது கூற முடியுமா?

---

ஸ்டூடியோ ஒன்றில் ஆபிரஹாம் லிங்கன் வரலாற்றுப் படம் உருவாகிறது. படப்பிடிப்பின் நிலையைக்காண்கிறோம்.

---

சோமுதான் ராஜேந்திரன். அடேயப்பா! ஓராண்டுக்கு பிறகு அவர் திறமையை இதில்தான் காணுகிறோம்!

யாரிடமும் பணியாத அவர் தன் அண்ணியிடம் மட்டும் பணிந்து போகும் போது சிறப்பாக இருக்கிறது அவர் நடிப்பு!

**லிங்கனாக நடிப்பவரோடு ஜால் பேசிக்கொண்டிருப்பதைக் காண் கிறோம். லிங்கன் வேடந்தரித்தவர் நீண்டகால பயிற்சிப்பெற்றவர்.**

மைனாவதிக்கு சிறியபாகம் தான்! கடைசியில் கணவ னிடம் சரணடையும் கட்டம் அற்புதம்!

ரெங்காராவுக்கு மாமூல் வேஷந்தான்.

வேலைக்காரியாய் வரும் தேவிகா சோமுவை திருத்தி அவனையே மணந்து கொள் கிறார். நல்ல நடிப்பு!

ராமச்சந்திரனைப் பயன் படுத்தாமல் விட்டு விட்ட னா. சூர்யகலா அழகாய் தோன்றுகிறார். அவ்வளவு தான்.

**அமெரிக்காவில் பொங்கல் (அறு வடைத்திருநாள்) களியாட்டம்.**

யோகானந்த் டைரக்ஷன் பொறுப்பை கச்சிதமாய்செய் திருக்கிறார். குறிப்பாக விருந் துண்ண வர மறுக்கும் சோமுவை அமுதா அறை வதும், பின்பு அவனுக் காகவே சாப்பிடாமல் காத்

## ஹாலிவுட்டில் படப்பிடிப்பு

ஜூபிடரின் தங்கப் பதுமையில்
சிவாஜி கணேசனும், டி. ஆர். ராஜகுமாரியும்.

திருப்பதும் எடுத்துக்காட்டுகள்.

'எத்தனை கோடி பணமிருந்தாலும்' என்ற கண்ணதாசனின் பாடல் நல்ல கருத்துள்ளது மட்டுமல்ல கேட்க இனிமையாகவும் இருக்கிறது. வேதாவின் இசையமைப்பின் திறமைக்கு இது ஒன்றே போதுமே!

பிருந்தாவன் காட்சிகளை நன்ருக ஒளிப்பதிவு செய்திருக்கிருர் செல்வராஜ்.

நம்மிடையே பலருக்கு அன்பு எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஜூபிலியின் "அன்பு எங்கே" அதற்கு விடை அளிக்கிறது. ஆமாம்! ரசிகர்களை ஏமாற்ருமல் அன்பு இருக்கும் இடத்தை காட்டிய ஜூபிலிபிலிம்ஸாரை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா? அதுவும் 14 ஆயிரத்தில் படத்தை முடித்திருப்பதை!

Edited & Published by K. Perumal Udayar,
55, Edapalayam Street, Madras-3. Asst. Editor : K. G. RAJU.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

# "ஜீப்" மார்க்கு

# எலக்ட்ரோ பிளேட் சாமான்கள்

அனுபவமும் பிரசித்திபெற்றதுமான

**கிரேட் ஈஸ்டர்ன் கமர்ஷியல்**
**கார்ப்பரேஷன் லிமிடெட்டாரால்**

தயாரிக்கப்பட்ட

பித்தளை, ஸ்டீல், நிக்கல் சாமான்களின் மீது கியாரண்டியான வெள்ளி, நிக்கல், குரோமியத்தால் உத்திரவாதமான எலக்ட்ரோபிளேடிங் செய்யப்பட்ட தாம்பூலத்தட்டு, ஆப்பிள் டிசைன் பௌடர் பெட்டிகள், டீ செட்டுகள், ஸ்பூன்கள், டேபிள் போர்க்கு, சகலவித ஸ்பூன்கள், குருவெட் செட்டுகள், பலவித தட்டுகள், டிரேக்கள், அநேக ரக சிகரெட் கேஸ்கள், ஐஸ் கிரீம் ஸ்பூன்கள், கத்திகள், மற்றும் பலவித நூதன அழகான ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

★

**S. C. SHAH**

9, BUNDER ST., MADRAS-1

# M. KANNAN

Government Approved
Fabricator and Contractor
(Regd. 10)

30, WALL TAX ROAD, MADRAS-3

★

Please Contact Us-For
COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS.

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas welding Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

*OUR MOTTO IS TO*
*SATISFY OUR CUSTOMER*


Wrapper printed at Shanti Press, Madras-1